பக்கங்கள்: 16
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | ஆனி 20 செவ்வாய்க்கிழமை 03.07.2018 | கதிர் 239

### இனி இது ரகசியம் அல்ல!

டெனீஸ்வரன் வழக்கில் அதிரடித் தீர்ப்பு வரலாம் என பத்து நாள்களுக்கு முன்னரே ஊகம் கூறியிருந்தேன். ஆனால் புதிது, புதிதாகப் பல அதிரடித் திருப்பங்கள் வரும் என நான் எதிர்பார்க்கவில்லை.

இந்தத் தீர்ப்பை ஒட்டிய புதிய தகவல்களை பக்கம் 03

# படைகளை வெளியேற்றி பொலிஸ் அதிகாரம் தந்தால் குற்றங்களைக் கட்டுப்படுத்துவது பெரும் காரியமல்ல



## கூறுகின்றார் வடக்கு முதலமைச்சர் விக்கி

யாழ்ப்பாணம், ஜுலை 03

"போர் முடிந்து அடுத்த மே மாதம் 10 வருடங்கள் ஆகப் போகின்றது. இன்னமும் எம்மைப் போர்க்கால மக்களாகப் பார்த்து இராணுவக் கண்காணிப்பை முடுக்கி வைத்து வருவது எம் மேல் நம்பிக்கை இன்மையைக் காட்டுகின்றது. குற்றச் செயல்கள் இங்கு கூடியுள்ளன. அவற்றைத் தடுக்க எமக்கு அதிகாரங்கள் தரப்படவில்லை. இராணுவம் வெளியேறி பொலிஸ் அதிகாரம் எமக்குக் கையளிக்கப்பட்டால் இன்றைய வன்முறைக் கலாசாரத்தை வடக்கில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது ஒரு பெரிய காரியமன்று."

– இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன்.

'ஜனாதிபதியின் மக்கள் சேவை' தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் எட்டாவது நிகழ்வு யாழ்ப்பாண பக்கம் 04

# நடுத்தெருவில் தமிழர்கள் ஏமாற்றிவிட்டது நல்லாட்சி

## மைத்திரியை ஜனாதிபதியாக்கியதால் துன்பப்படுகிறோமென மாவை சாடல்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜுலை 03

"தமிழ் மக்களுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் ஏமாற்றி எங்களை நடுத்தெருவில் விட்டுள்ளது நல்லாட்சி அரசு. அரசுக்கு ஆதரவு வழங்கினோம். அரசோடு சேர்ந்து வேலை செய்தோம். ஆயினும் இப்போது ஏமாற்றப்பட்டுள்ளோம். ஜனாதிபதி மைத்திரியை மகிழ்ச்சியோடு தெரிவு செய்தோம். அதனால் இன்று துன்பப்படுகின்றோம். எல்லா வழிகளிலும் எம்மைப் புறந்தள்ளியுள்ளது இந்த அரசு."

- இவ்வாறு அரசைக் கடுமையாக விமர்ச்சித்துக் கருத்து வெளியிட்டார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராசா. பக்கம் 14

## றெஜினா கொலை; மன்னாரில் இன்று அமைதிப் பேரணி

மன்னார், ஜுலை 03

சுழிபுரம் பகுதியில் பாடசாலை மாணவி றெஜினா படுகொலை செய்யப்பட்டமையைக் கண்டித்து மன்னாரில் இன்று அமைதிப் பேரணியொன்று முன்னெடுக் பக்கம் 14

## புலிகளை மீளவும் உருவாக்குவதே எங்கள் நோக்கம்



### யாழ். வந்த அமைச்சர்கள் முன்னிலையில் விஜயகலா மகேஸ்வரன் பகிரங்கக் கருத்து

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜுலை 03

தமிழீழ விடுதலைப் புலிகளை மீண்டும் உருவாக்கவேண்டும் என்பதே இன்றுள்ள நிலையில் எங்கள் முக்கிய நோக்கம்.

இவ்வாறு நேற்று யாழ்ப்பாணத்தில் அரச பக்கம் 14

## அமைச்சர்களின் எண்ணிக்கை; ஆளுநரைத் தலையிட உத்தரவு

### சத்தியலிங்கமும் மீள அமைச்சராகும் நிலைமை





கொழும்பு, ஜுலை 03

வடக்கு மாகாணசபையின் அமைச்சர்களின் எண்ணிக்கை தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அவதானிப்புகள், இடைக்கால உத்தரவு ஆகியவற்றையும் அரசமைப்பில் பக்கம் 03

## கூட்டமைப்பு விரைவில் மஹிந்தவுடனும் பேசும்

யாழ்ப்பானம், ஜுலை 03

புதிய அரசமைப்பு குறித்து முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரைவில் பேச்சு நடத்தும் என அதன் பக்கம் 14

## முதலமைச்சர் வேட்பாளர் மாவை என்று கூறவில்லை

யாழ்ப்பாணம், ஜுலை 03

மாவை சேனாதிராசா வடக்கு முதலமைச்சர் வேட்பாளரென நான் கூறவில்லை எனக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் எம்.பி. பக்கம் 14

## வன்முறைக் கலாசாரத்தை ஒழிக்க வட்டார ரீதியில் விழிப்புக் குழுக்கள்

### உள்ளூராட்சி உறுப்பினர்களின் உதவியுடன் அமைக்குமாறு கூட்டமைப்பு கோரிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜுலை 03

யாழ். குடாநாட்டில்தலைதூக்கியுள்ள வன் முறைக் கலாசாரத்தை உடனடியாகக் பக்கம் 03

## அமைச்சராகவே உள்ளார் டெனீஸ்

### சுமந்திரன் விளக்கம்

யாழ்ப்பாணம், ஜுலை 03

டெனீஸ்வரன் திரும்பவும் பதவி ஏற்கவேண்டுமென்று மேன்முறையீட்டு நீதிமன்றம் சொல்ல பக்கம் 14

## வடக்கு மாகாண அமைச்சரவை இப்போது சட்ட ரீதியாக இல்லை

### சட்டவட்டாரங்கள் கருத்து

கொழும்பு, ஜுலை 03

டெனீஸ்வரன் வழக்கில் மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய இடைக்கால உத்தரவு காரணமாக வடக்க மாகாண சபையில் தற்போது சட்டரீதியான அமைச்சரவை ஒன்று செயற்பாட்டில் இல்லை எனக் கொழும்பு சட்டவட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. பக்கம் 03

# பல கோரிக்கைகளை முன்வைத்து முன்னாள் போராளி போராட்டம்



மட்டக்களப்பு, ஜுலை 03
மட்டக்களப்பு வாழைச்சேனையில் முன்னாள் போராளியான முனிதாஸ சிறிகாந் என்பவர் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் நேற்றுக் காலை முதல் ஈடுபட்டுள்ளார்.

வாழைச்சேனை பிரதான வீதியிலுள்ள பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு முன்பாகவே இவர் போராட்டத்தை முன்னெடுத்துள்ளார்.

மக்களுக்கு பெரும் சுமையாக இருக்கும் நுண்கடன்களை அரசு பொறுப்பேற்கவேண்டும், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு அடிப்படை வசதி, வீடு இழப்பீடு, தொழில்வாய்ப்பு வழங்க அரசு ஏற்பாடு செய்யவேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தே இவர் உண்ணா விரதத்தை முன்னெடுத்துள்ளார்.

இதன்போது மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சீ.யோகேஸ்வரன், எஸ்.வியாழேந்திரன் ஆகியோர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளவருடன் கலந்துரையாடிய போதிலும் அவர் தொடர்ந்து தமது உண்ணாவிரதத்தை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.
(ஐ)

### காணாமலாக்கப்பட்டோருக்கான போராட்டத்திற்கு ஆதரவளித்து

# பிரித்தானியாவில் போராட்டம்






காணாமலாக்கப்பட்டோருக்கான நீதி வேண்டி 500 ஆவது நாளாக இலங்கையில் தொடரும் போராட்டத்திற்கு ஆதரவாக பிரித்தானியாவில் போராட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

பிரித்தானியப் பிரதமர் இல்லத்திற்கு முன்பாக கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

பிரித்தானியாவில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழக தமிழ் மாணவர்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த போராட்டத்திற்கு அனைத்து தமிழ் அமைப்புக்களும் ஆதரவு வழங்கியிருந்தனர்.

போராட்டத்தில் பங்குபற்றிய இரட்ணவேல் பிரசன்னா என்பவர் கூறும்போது–

இறுதி யுத்தத்தின் கடைசி நாட்களில் இலங்கை இராணுவத்திடம் கையளிக்கப்பட்ட தமது அன்பானவர்களுக்கான பதில் வேண்டி 500 ஆவது நாளாக கிளிநொச்சியில் உறவுகள் போராடிவருகிறார்கள்.

ஆனால் பதிலளிக்க வேண்டிய நல்லாட்சி அரசோ சர்வதேசமோ எந்தப்பதிலும் அளிக்காமல் மௌனிகளாக இருக்கிறார்கள்.

இந்தவேளையில், உலகெங்கும் பரந்து வாழும் ஈழத்தமிழர்களாகிய நாம் அவர்களோடு தோளோடு தோள் நிற்பது தார்மீகக் கடமையாகும். எமக்கு நடந்த இனப்படு கொலைக்கு நீதி கிடைக்கும் வரை ஓயமாட்டோம் என கூறுரைத்தார். அநேகமாக இளைஞர்களின் ஒலியும் இதுவாகவே அமைந்திருந்தது.

இவ்வேளை, அண்மையில் ஐக்கிய நாடுகள் சபையினால், உலகின் முக்கியமான ,உடனடியாகக் கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய விடயங்களின் பட்டியலில் இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டோர் சம்பந்தமான விடயமும் உள்ளடக்கப்பட்டிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.
(க-8)

# மத்தளவுக்கு மீண்டும் விமானம் வரும் என்கிறார் பிரதமர் ரணில்

மத்தள விமான நிலையத்துக்கு இந்த ஆண்டு இறுதியில் இருந்து மீண்டும் சர்வதேச விமான சேவைகள் ஆரம்பிக்கப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மஹிந்தராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் அம்பாந்தோட்டையில் அமைக்கப்பட்ட மத்தள அனைத்துலக விமான நிலையத்துக்கு சேவையை நடத்தி வந்த, ஒரே ஒரு விமான சேவையான ‘பிளை டுபாய்’ நிறுவனமும், அண்மையில் தனது சேவையை நிறுத்தியது.


இதையடுத்து, மத்தள விமான நிலையத்துக்கு தற்போது பயணிகள் விமான சேவைகள் எதுவும் இடம்பெறுவதில்லை.

இதுதொடர்பாக நேற்று முன்தினம் நடந்த நிகழ்வு ஒன்றில் கருத்து வெளியிட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க –

முன்னர் மத்தள விமான நிலையத்தில் பறவைகள் மாத்திரம் தரையிறங்கின. இப்போது, மத்தள விமான நிலையத்தில் இருந்து வணிக விமானங்களை இயக்குவது தொடர்பாக, இலங்கை அரசு நம்பிக்கை கொண்டிருக்கிறது.

இந்த ஆண்டு இறுதியில் இருந்து, சர்வதேச விமானங்கள் மத்தளவில் இருந்து மீண்டும் சேவைகளை ஆரம்பிக்கும் என்று பிரதமர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

# வவுனியா – பண்டாரிக்குளம் பிரதான வீதியில் சிரமதானம்



வவுனியா – பண்டாரிக்குளம் பிரதான வீதி சிரதானம் செய்யப்பட்டுள்ளது. வவுனியா, பண்டாரிக்குளம் – உக்கிளாங்குளம் கிராம பொலிஸ் பாதுகாப்புக் குழுவின் ஏற்பாட்டில் குறித்த சிரமதானம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

வவுனியா, பண்டாரிக்குளம் அம்மன் கோவில் ஊடான பிரதான வீதியின் இரு மருங்கும் பற்றைகளாலும், சிறிய செடிகளாலும் சூழப்பட்டு காணப்பட்டது. நாளாந்தம் பாடசாலை மாணவர்கள் முதல் பலரும் இந்த வீதி வழியாக பயணம் செய்யும் நிலையும், இந்தப் பற்றைகளில் இருந்து நுளம்புத் தொல்லையும் காணப்பட்டது.

இந்த நிலையில் சிரமதானம் ஊடாக வீதியின் இரு மருங்கும் துப்புரவு செய்யப்பட்டது. இந்தச் சிரமதானப் பணியில் பண்டாரிக்குளம் கிராமசேவையாளர் உமாபதி, வவுனியா நகரசபை உறுப்பினர் க.சுமந்திரன், பண்டாரிக்குளம்– உக்குளாங்குளம் கிராம பொலிஸ் பாதுகாப்புகுழு உறுப்பினர்கள் உட்பட பலரும் இதில் கலந்து கொண்டனர்.
(க-100)

# போதைப்பொருள் பாவனைக்கு எதிராக மாந்தை கிழக்கில் நேற்று போராட்டம்

போதைப்பொருள் பாவனைக்கு எதிரான போராட்டம் ஒன்று நேற்றுக் காலை 9.30 மணிக்கு மாந்தைகிழக்கு பகுதியில் இடம்பெற்றது.

மாந்தை கிழக்கு பிரதேச செயலகம், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மற்றும் மாந்தை கிழக்கு பிரதேச சபை பாடசாலை மாணவர்கள் இணைந்து இந்த போராட்டத்தை முன்னெடுத்திருந்தார்கள்.

நேற்றுக் காலை மாந்தைகிழக்கு பிரதேச செயலகம் முன்பாக ஆரம்பித்த இந்த கவனவீர்ப்பு பேரணி எஸ்.ஆர். சந்தி சென்று மீண்டும் பிரதேச செயலகத்தை வந்தடைந்தது.

போதைப்பொருள் தடுப்பு தேசிய வாரம் கடந்த 26 ஆம் திகதி முதல் 02 ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்தப்பட்டது.



இதன் இறுதிநாளான நேற்று மக்களை விழிப்புணர்வூட்டும் முகமாக இந்த கவனவீர்ப்பு பேரணி முன்னெடுக்கப்பட்டது.
(க-8)

# வடக்கிலும் நாளை கல்வித்துறை பகிஷ்கரிப்பு

## இலங்கை ஆசிரியர் சங்கம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜுலை 03
எதிர்வரும் 4ஆம் திகதி 16 தொழிற்சங்கங்கள் இணைந்து மேற்கொள்ளவுள்ள பணிப்பகிஷ்கரிப்பு வடக்கிலும் இடம்பெறவுள்ளது என இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது குறித்து இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவிக்கையில்–

இலங்கை கல்வித்துறையில் அரசியல் பழிவாங்கல் நியமனம் எனும் போர்வையில் தகுதியற்றவர்கள் 1000 இற்கும் அதிகமானவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படவுள்ளன. பிரமாணக் குறிப்புகளை மீறி வழங்கப்படும் இந்த அரசியல் ரீதியான நியமனங்கள் கல்வித்துறையை சீரழிக்கும் செயற்பாடாகும். இத்தகைய நியமனங்களை எதிர்த்து – இலங்கை கல்வி நிர்வாக சேவை சங்கம், அதிபர் சங்கங்கள், ஆசிரியர் சங்கங்கள் என 16 தொழிற்சங்கங்கள் இணைந்து நாளை 4 ஆம் திகதி புதன்கிழமை நாடு தழுவிய ரீதியில் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளன.

இந்தப் பகிஸ்கரிப்பு வடக்கு மாகாணத்திலும் நடைபெறவுள்ளது. அன்றைய தினம் மத்திய கல்வியமைச்சின் முன்னால் பெரும் ஆர்ப்பாட்டமும் நடைபெறவுள்ளது.

நாளை 4 ஆம் திகதி புதன்கிழமை அதிபர்கள், ஆசிரியர்கள், அதிகாரிகள் அனைவரும் சுகவீன விடுமுறை மூலம் பணிபகிஷ்கரிப்பில் ஈடுபட்டுக் கல்வித்துறையில் ஏற்படவுள்ள ஆபத்தைத் தவிர்க்க சமூகப்பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

இத்தகைய முறையற்ற நியமனங்கள் எதிர்கால சமூகத்துக்கு ஆபத்தானவை என்பதை உணர்ந்து அன்றைய நாளில் பாடசாலைகளுக்கு மாணவர்களை அனுப்பாது மாணவர்களின் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பெற்றோர்கள் மேற்கொண்டு ஒத்துழைக்கவேண்டும்.-என்றார்.(ஐ)

## வன்முறைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுக்குள் கொண்டுவர உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் உதவியுடன் வட்டார ரீதியில் விழிப்புக் குழுக்களை அமைக்க உடன் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இந்த வாரத்துக்குள் இவை அமைக்கப்பட்டு இயங்கவேண்டும்.

– இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

குடாநாட்டில் மிக மோசமாக அதிகரித்து வரும் குற்றச்செய்கள் குறித்து நேற்று யாழ்ப்பாணத்தில் தாம் நடத்திய விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் இந்த அழைப்பை விடுத்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

அண்மைய நாள்களில் நினைக்க முடியாத அளவு மிகக் கொடூரமான வன்செயல்கள் இடம்பெற்றிருக்கின்றன. இந்த வன்முறைக் கலாசாரம் குறித்து குறைந்தது இரண்டு தடவை கள் பொதுவெளியில் நான் பேசியிருக்கிறேன். இந்த வன்முறையைத் தவிர்ப்பதற்கு அல்லது கட்டுப்படுத்தவதற்கு அல்லது இல்லாதொழிப்பதற்குச் சமூகத்தினரே – நாங்களே – விசேடமாக இளைஞர்களே – முன்வர வேண்டுமென்று கோரிக்கை விடுத்திருந்தேன்.

இன்றைய சூழ்நிலையில் இது அவசரமாகச் செய்யப்படவேண்டிய விடயமாக உள்ளது. நாங்கள் வெளியில் இருந்து மற்றவர்கள் எங்களைத் துன்புறுத்துகின்றார்கள், வன்முறைக்குள்ளாக்குகின்றார்கள் என்ற குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவதை விடுத்து எங்களில் இருந்து எங்களைப் பாதுகாக்கவேண்டிய ஒரு துரதிஷ்டவசமான சூழ்நிலைக்குள் இப்போது அகப்பட்டிருக்கிறோம்.

ஆகையால் பொலிஸார் மீது பல குற்றச்சாட்டுக்களை நாங்கள் சுமத்துகிறோம். அதில் நியாயம் இருக்கிறது. உடனடி நடவடிக்கை எடுக்கவில்லை. எடுக்கவேண்டுமென்பதெல்லாம் உள்ளது. ஆனால் இவை எல்லாவற்றுக்கும் மேலாக இந்த வன்செயல்களைச் செய்கிறவர்கள் எங்கள் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். ஆகையால் ஒரு சமூகப் பிறழ்வு இடம்பெறுகின்ற போது அது குறித்து கரிசனை காட்டவேண்டிய பொறுப்பு எங்களிடத்தே – எங்கள் கைகளிலேயே – உள்ளது.

இந்த வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதற்கு நாங்கள் சமூகமட்ட விழிப்புக் குழுக்களை அமைக்கவேண்டுமென்று நாங்கள் சொல்லியிருக்கிறோம். அதாவது ஒவ்வொரு கிராமத்திலும் இளைஞர்கள் சேர்ந்து அப்படியான குழுக்களை அமைக்கவேண்டும்.

அவ்வாறு அமைப்பது மட்டுமல்ல இரவு நேரங்களில் ரோந்து நடவடிக்கைகளிலும் ஈடுபட வேண்டிய கட்டாயத் தேவையும் ஏற்பட்டிருக்கின்றது. அதனை அவசியமாகச் செய்யவேண்டிய காரணத்தினால்தான் இதனை ஓர் ஊடகச் சந்திப்பின் ஊடாக அனைவருக்கும் தெரியப்படுத்த நினைத்தோம்.

அண்மையிலே உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஒவ்வொரு வட்டாரத்துக்கும் ஒவ்வொரு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார்கள். அவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்என்பதுமுக்கியமல்ல. ஆனால் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதி ஒவ்வொரு சிறிய வட்டாரத்துக்கும் ஒருவராவது இருக்கிறார். ஆகையினாலே இந்தச் சூழ்நிலையைக் கட்டுப்படுத்தவதற்கு ஒவ்வொரு வட்டாரப் பிரதிநிதியும் விழிப்புக் குழுக்களை அமைக்கும் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று நாங்கள் கேட்டுக் கொள்கின்றோம்.

இதற்கான அனுசரணை வேண்டுமாக இருந்தால் நாங்கள் வழங்குவோம். ஒரு வார காலத்துக்குள் அதாவது இந்த வாரத்துக்குள் ஒவ்வொரு வட்டாரப் பிரதிநிதியும் அந்தப் பொறுப்பை ஏற்று தமது வட்டாரத்தில் உள்ள கிராமங்கள் எத்தனையோ அந்ததந்தக் கிராமங்களில் விழிப்புக் குழுக்களை அவசரமாக அமைக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். பிரதேச இளைஞர்கள், விளையாட்டுக் கழக உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள் எல்லோரும் இந்த வட்டார பிரதிநிதிகளோடு சேர்ந்து உடனடியாக விழிப்புக் குழுக்களை அமைப்பதற்கும், அந்த விழிப்புக் குழுக்கள் இயங்குவதற்கும் தேவையான அனுசரணை கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

உடனடியாகக் கட்டுப்படுத்தப்பட வேண்டிய தேவை இங்கே எழுந்திருக்கிறது. இந்த வன்முறையை நாங்கள் இல்லாதொழிப்பதற்கு நீண்ட காலத் திட்டங்களிலும் நாங்கள் இறங்க வேண்டியிருக்கிறது. வன்முறையைப் புகழும் கலாசாரத்தை நாங்கள் தவிர்க்கவேண்டும்.

இதற்கு அரசியல்வாதிகளும் விதிவிலக்கல்லர். அப்படியானதொரு சூழ்நிலையில் இளைஞர்கள்வன்செயல்களைக்கையாளுகிறார்கள் என்று நாங்கள் குறை கூறிப் பயனில்லை. ஆகையினால் வன்செயலால் எதுவும் ஆகாது. அது முற்றாகப் புறக்கணிக்கப்படவேண்டியது என்ற செய்தியை உலகத்துக்கு நாங்கள் சொல்லவேண்டும் – என்றார். (ஐ-7)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"அரசமைப்பு ஏற்பாடுகளின்படி ஒரு மாகாணசபைக்கு முதலமைச்சர் உட்பட ஐந்து பேரே அமைச்சர்களாக இருக்கமுடியும்.

"ஆனால் முதலமைச்சர் விக்னேஸ்வரனுடன் சேர்ந்து ஐந்துக்கும் அதிகமாக ஆறு பேர் அல்லது ஏழு பேர் இப்போது வடக்கு மாகாணசபையின் அமைச்சர்களாக இருக்கின்றனர் என்ற சாரப்பட நீதிமன்றம் தனது உத்தரவில் குறிப்பிட்டுள்ளது.

"ஐந்துக்கு மேற்பட்ட அமைச்சர்கள் இருப்பார்களாயின் அது அரசமைப்பை மீறிய செயற்பாடு. அத்தகைய அமைச்சரவை சட்டரீதியானது அல்ல.

"நீதிமன்றம் சுட்டிக்காட்டியபடி அமைச்சர்களை நியமிக்கும் அதிகாரத்தைக் கொண்ட ஆளுநர், அமைச்சர்களின் எண்ணிக்கை தொடர்பில் சரியான நடவடிக்கை எடுத்து, அரசமைப்பு ஏற்பாடுகள், மட்டுப்படுத்தல்களுக்கு அமைவாக அமைச்சரவையை சீர் செய்யும் வரை இப்போதிருக்கும் அமைச்சர் வாரியம் சட்டப்படியானது அல்ல.

"கடந்த வெள்ளிக்கிழமையன்று நீதிமன்றம் உத்தரவு வழங்கிய நேரத்திலிருந்து நிலைமை இதுதான்!" – இப்படி அந்த சட்டவட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (உ)

# கோர விபத்தில் சிக்கி சிறுவன் சாவு!

மட்டக்களப்பு – தும்பங்கேணி, பழுகாமம் சந்தியில் இடம்பெற்ற விபத்தில் இரண்டு வயதுச் சிறுவன் உயிரிழந்துள்ளமையுடன் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

தும்பங்கேணி, பழுகாமம் சந்தியில் நேற்றுக் காலை டிப்பர் வாகனமும் ஓட்டோவும் மோதுண்டமையால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

பலாச்சோலையில் இருந்து களுவாஞ்சிகுடிக்குச் சென்ற ஓட்டோவும், சம்மாந்துறையில் இருந்து கொக்கட்டிச்சோலைக்குச் சென்ற டிப்பர் வாகனமும் மோதியதால் ஓட்டோ நீண்டதூரம் இழுத்துச் செல்லப்பட்டதாகச் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இதன்போது ஓட்டோவில் பயணித்தி இரண்டு வயதுச் சிறுவன் அந்த இடத்திலேயே உயிரிழந்தான். சிறுவனின் தாயாரும் ஓட்டோச் சாரதியும் படுகாயமடைந்தனர் என வெல்லாவெளிப் பொலிஸார் கூறினர்.

சடலம் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. படுகாயமடைந்தவர்களும் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலதிக விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று வாசகர்களோடு பகிர்ந்து கொள்ளலாம் என நினைக்கிறேன்.

டெனிஸ்வரன் நேற்று ஆளுநருக்கு ஒரு பக்ஸ் செய்தி அனுப்பினார்.

*"நான் இபபோதும் அமைச்சர் என்பது நீதிமன்றத்தில் உறுதிப்படுத்தப்பட்டு விட்டது. ஆகவே, வடமாகாண மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக, வாணிப, கிராமிய அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மோட்டார் போக்குவரத்த அமைச்சராக நான் தொடர்ந்து செயற்பட எனது அமைச்சுக்குரிய இடத்தையும், உரிய செயலாளரையும், உரிய பணியாளர் தொகுதியினரையும் தாமதமின்றி உடன் ஒழுங்குபடுத்தித் தாருங்கள்!"* – என்று அதில் கோரியிருக்கின்றார் அவர்.

நீதிமன்றத்தின் பணிப்பின்படி நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவு விவரத்தை நீதிமன்ற அதிகாரிகள் நேற்றுத் தொலைபேசி மூலம் ஆளுநருக்குத் தெளிவுபடுத்தினர். நேற்று கொழும்பில் நின்ற ஆளுநர் இன்று அல்லது நாளை யாழ் வந்து உரிய நடவடிக்கை எடுப்பார் எனத் தெரிகின்றது.

சத்தியலிங்கம் விடயத்திலும் ஆளுநர் ஒரு முடிவை எடுக்க வேண்டியிருக்கும். முடிவு தீர்மானிக்கும் பந்தை அவரது களத்துக்குள் தள்ளி விட்டுள்ளது நீதிமன்றம். அவர்தான் அதனை வாய்ப்பாக விளையாட வேண்டியிருக்கும்.

இந்த இடைக்கால உத்தரவின் பிரதிகளை எதிர்மனுதாரர்களான ஆளுநர், சர்வேஸ்வரன், அனந்தி சசிதரன், சிவநேசன், குணசீலன் ஆகியோருக்கு சேர்ப்பிப்பது மனுதாரர் டெனிஸ்வரனின் கடமை. ஏனெனில் இந்த எதிர்மனுதாரர்கள் சார்பில் நீதிமன்றில் சட்டத்தரணிகள் யாரும் தெரிபடவில்லை. அவர்களின் பங்களிப்பின்றியே இது வரை விசாரணை நடந்துள்ளது.

ஆனால், முதலாம் எதிர்மனுதாரரான முதல்வர் விக்கி சார்பிலும் 6 ஆம் எதிர்மனுதாரரான சத்தியலிங்கம் சார்பிலும் சட்டத்தரணிகள் நீதிமன்றில் ஆஜராகியமையால் உத்தரவுப் பிரதியைப் பெற்றுக் கொள்வது அவர்களின் பொறுப்பு.

நேற்று மாலை தற்போது செயற்படும் நான்கு அமைச்சர்களும் முதல்வர் தலைமையில் கூடி நிலைமையை ஆராய்ந்தனர்.

இதைக் கேள்விப்பட்ட சில ஊடகவியலாளர்கள் பிரதம செயலாளரைத் தொடர்பு கொண்டு *"அமைச்சர் வாரியக் கூட்டம் நடக்கின்றதா?"* – எனக் கேள்வி எழுப்பினர்.

நீதிமன்ற உத்தரவை அடுத்து சட்டரீதியான அமைச்சர் வாரியம் இல்லை என்பதே சட்ட நிலைப்பாடு. இந்தச் சூழலில் அமைச்சர் வாரியக் கூட்டமா என்பதுதான் கேள்வியின் தொனிப்பொருள்.

பிரதம செயலாளரர் பதறியடித்துக் கொண்டு *"இல்லை, இல்லை.... அவர்கள் தனிப்படக் கூடிப் போகியிருக்கலாம். அமைச்சர் வாரியக் கூட்டம் ஏதுமில்லை."* – என்று பதிலளித்தார்.

இப்போது வழங்கப்பட்டுள்ள தீர்ப்பு நிரந்தரமானது அல்ல. ஒவ்வொரு வழக்குத் தவணையின்போதும் அது தொடர்ந்து நீடிக்கப்படக்கூடும் என்பதே எதிர்பார்ப்பு.

மூல வழக்கு எதிர்வரும் 9 ஆம் திகதி மீண்டும் மேன்முறையீட்டு நீதிமன்றில் அழைக்கப்பட வுள்ளது. டெனிஸ்வரனுக்கு சார்பான தற்போதைய இடைக்கால உத்தரவு அடுத்தநாள் – அதாவது 10 ஆம் திகதி வரையே – வழங்கப்பட்டுள்ளது. அடுத்த வழக்குத் தவணையின்போது அது மீளவும் அதற்கடுத்த தவணைக்கு அடுத்த நாள் வரை நீடிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கிடையில், இந்த இடைக்கால உத்தரவுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் தடை உத்தரவு பெறலாமா என்ற முயற்சியில் முதல்வர் விக்னேஸ்வரன் முனைப்பாக இருக்கின்றார் என்று தகவல்.

ஆனால், அவர் உயர்நீதிமன்றில் தடை உத்தரவு எடுக்க முன்னர், மேன்முறையீட்டு நீதிமன்றம் தற்போது வழங்கிய உத்தரவை ஆளுநர் கனகச்சிதமாக நடைமுறைப்படுத்த முயற்சிப்பார் என்றே தோன்றுகின்றது.

அது, டெனிஸ்வரன், சத்தியலிங்கம் ஆகிய இருவரையும் மீள அமைச்சுக் கதிரையில் அமர்த்துவதாக மட்டுமல்லாமல், அதையும் தாண்டி ஐங்கரநேசன், குருகுலராஜா ஆகியோரையும் மீள அமைச்சர்களாக்குவதாகவும் இருக்கலாம்.

பிந்திய இருவரும் தங்களது அமைச்சர் பதவிகளை இராஜினாமாச் செய்திருக்கலாம். அதற்கான கடிதங்களை முதலமைச்சரிடம் அவர்கள் ஒப்படைத்திருக்கலாம். ஆனால் அவை முதல்வரினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு உரிய நடவடிக்கைக்காக முதல்வரின் பரிந்துரையுடன் ஆளுநருக்கு உரிய காலத்தில் அனுப்பப்பட்டனவா? அது தொடர்பில் உரிய நடவடிக்கைகளை ஆளுநர் எடுத்தாரா?– என்பதில்தான் அவ்விடயம் தங்கியுள்ளது.

டெனிஸ்வரனின் மனு பழைய விடயங்களைக் கிளற ஆரம்பிக்கச் செய்துவிட்டது. இனி என்ன? பழையவை எல்லாம் அம்பலத்துக்கு வந்து ஒரு கலக்குக் கலக்கியே விடயங்கள் ஓயும். அது தவிர்க்க முடியாததே.

-மின்னல்-

## அமைச்சர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறப்பட்டுள்ள – அமைச்சர்கள் தொடர்பான மட்டுப்படுத் தல் விதிகளையும் கவனத்தில் எடுத்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வது ஆளுநரைப் பொறுத்தது என மேன்முறையீட்டு நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

டெனிஸ்வரனின் வழக்குத் தொடர்பாக வழங்கப்பட்ட இடைக்கால உத்தரவிலேயே நீதிமன்றம் இதனைக் குறிப்பிட்டுள்ளது.

அமைச்சர்களின் எண்ணிக்கை தொடர்பில் நீதிமன்றம் தனது தீர்ப்பில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது:–

"இந்த நீதிமன்றத்தின் முன் சமர்ப்பிக்கப்பட்டவற்றின்படி மனுதாரர் அவரது அமைச்சர் பதவியிலிருந்து சட்டப்படி விலக்கப் படவில்லை. அதனடிப்படையில் இடைக்கால நிவாரணம் அனுமதிக்கப்படுகின்றது.

இந்த நீதிமன்றத்தின் அவதானிப்புக்கள், அனுமதிக்கப்பட்டுள்ள இடைக்கால நிவாரணம் ஆகியவற்றின் நோக்கில் –

அமைச்சர்கள் எண்ணிக்கை தொடர்பான அரசமைப்பின் மட்டுப்படுத்தல்களைக் கவனத்தில் கொண்டு, பொருத்தமான நடவடிக்கை எடுப்பது நியமனம் செய்யும் அதிகாரத் தரப்பைப் பொறுத்தது." – என்று மன்று தெரிவித்துள்ளது.

இங்கு அமைச்சர்களை நியமனம் செய்யும் அதிகாரத் தரப்பு என ஆளுநரையே நீதிமன்றம் குறிப்பிடுகின்றது. தீர்ப்பின் பிற இடங்களில் அவ்வாறே குறிப்பிடப்பட்டுள்ளது.

டெனிஸ்வரன் அமைச்சர் பதவியிலிருந்து சட்டரீதியாக நீக்கப்படவில்லை என நீதிமன்றம் தனது உத்தரவில் குறிப்பிட்டு விட்டது.

ஆனால், சத்தியலிங்கம் தொடர்பில் ஒரு முடிவை நீதிமன்றம் தெரிவிக்கவில்லை. அது தொடர்பில் மனுதாரர் டெனிஸ்வரன் குறிப்பிட்ட கருத்தை மட்டும் நீதிமன்றம் தொட்டுக் காட்டி விட்டு, அது குறித்து சரியான நடவடிக்கையை எடுப்பது ஆளுநரைச் சார்ந்தது என்று குறிப்பிட்டுள்ளது.

சத்தியலிங்கத்தின் இராஜினாமாக் கடிதமோ அல்லது அவரை உத்தியோகபூர்வமாகப் பதவி விலக்கி, அதனைப் பரிந்துரை செய்யும் முதல்வரின் கடிதமோ ஆளுநரிடம் இதுவரை சமர்ப்பிக்கப்படாதவிடத்து, அவரையும் அமைச்சராகத் தீர்மானித்து அதனடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு இப்போது ஆளுநர் தலையில் விழுந்துள்ளது எனக் கூறப்படுகின்றது.

டெனிஸ்வரன் வழக்கின் இடைக்கால உத்தரவுப் பிரகாரம், டெனிஸ்வரனோடு, சத்தியலிங்கமும் அமைச்சராகவே இருக்கின்றார் என ஆளுநர் கருதுவாராயின் அதனடிப்படையில் தற்போதுள்ள அமைச்சர் வாரியத்தில் இருவரை நீக்கி, அமைச்சர் வாரிய எண்ணிக்கையை ஐந்தாகக் குறைக்கும்படி முதல்வரை ஆளுநர் கோருவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## ஹிட்லர்களும் பொல் பொட்டுகளும்

**தென்னிலங்கையில் அரசியல் குழப்பம் உச்சத்தை எட்டியிருக்கின்றது.**

**நாட்டின் மிகப் பெரிய ஊழல்களுள் ஒன்று என வர்ணிக்கப்படும் மத்திய வங்கி பிணைமுறி விவகாரத்தினால் கையைச் சுட்டுக் கொண்டது நல்லாட்சி அரசின் பிரதான பங்காளித் தரப்பான ஐ.தே.கட்சி.**

**இப்போது, அந்தக் குற்றச்சாட்டை மூடி மறைத்து, மக்களின் கவனத்தைத் திசை திருப்பி விடுவதற்கு நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகையின் செய்தி ஆளும் தரப்புக்கு நல்ல வாய்ப்பாகிப் போய்விட்டது.**

**கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசாரத்துக்கு இலங்கையில் அரசுடன் கட்டட ஒப்பந்த விடயங்களில் சம்பந்தப்பட்டிருக்கும் சீன நிறுவனம் ஒன்று 76 லட்சம் டொலர்களை வழங்கியது என்று 'நியூயோர்க் ரைம்ஸ்' பத்திரிகையில் வெளியான கட்டுரை ஒன்றில் கூறப்பட்ட விடயத்தை வசமாகப் பயன்படுத்தி மஹிந்த தரப்பை போட்டுத் தாக்குகின்றது ஐ.தே.கட்சி.**

**நியூயோர்க் ரைம்ஸ் கட்டுரை பற்றிய பரபரப்பால் பிணைமுறி விவகார ஊழல் பரபரப்பு சற்று அடங்கியிருக்கின்றது.**

**ஆனால், இரு பிரதான தரப்புகளும் தங்களுக்குள் மாறிமாறி வாரியிறைக்கும் சேற்றில் சில உண்மைகள் தெரிந்தோ தெரியாமலோ வெளியே வந்த வண்ணம் இருப்பதும் நல்ல சமிக்ஞைதான்.**

**முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவை வாழ்த்திப் பேசிய தென்னிலங்கை சிரேஷ்ட பௌத்த பிக்கு ஒருவர் தேவைப்பட்டால் ஹிட்லர் போல் மாறியாவது ஆட்சியைக் கைப்பற்றி, நாட்டை நேர்சீராக்குங்கள் என்று குறிப்பிட்டமையை அடுத்து இப்போது கோட்டாபாயவை 'ஹிட்லர்' என்று அடைமொழி வைத்து நையாண்டி பண்ணும் அரசியல் போக்கு தென்னிலங்கையில் வந்து விட்டது.**

**குறிப்பாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமது பொது மேடை உரைகளில் கோட்டாபய ராஜபக்ஷவை 'ஹிட்லர்' என்றும், மஹிந்த ராஜபக்ஷவை 'ஹிட்லரின் மூத்த சகோதரன்' என்றும் கிண்டல் செய்து வருகின்றார்.**

**அதற்குப் பதிலடி கொடுக்கும் விதத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை 'பொல் பொட்டின் தம்பி' என்று பொது மேடைகளில் பரிகாசம் செய்கின்றார் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.**

**ஜேர்மனியின் சர்வாதிகாரியாகி முழு உலகையும் கைப்பற்றுவதற்குத் துடித்த ஹிட்லரின் கதை நமக்குத் தெரியும்.**

**பொல் பொட்டை இளைய தலைமுறை சில சமயங்களில் அறியாது இருக்கலாம்.**

**1975 முதல் 1979 வரை கம்போடியாவை ஆட்சி செய்த சர்வாதிகாரத் தலைவன் பொல் பொட். பொல் பொட்டின் கெமரூஜ் ஆட்சியின் கீழ் கம்போடியாவின் பெயர் 'ஜனநாயக கம்பூச்சியா' என மாற்றப்பட்டது. மவோயிஸக் கொள்கையில் கம்பூச்சியாவை சோசலிஸ விவசாயக் குடியரசாக மாற்றுதல் என்ற பெயரில் பொல் பொட் ஆட்சிப் பீடம் எடுத்த இனவழிப்பு மற்றும் கொடுங்கோல் அராஜகத்தினால் 15 லட்சம் முதல் முப்பது லட்சம் வரையான கம்போடியர்கள் கொல்லப்பட்டனர். அந்த அழிவு நாச வேலைகளினாலும், அந்த ஆட்சியின் கீழான பசி, பட்டினி அவலத்தினாலும் கம்போடியாவின் கால்வாசி ஜனத்தொகை அழிந்து போனது.**

**அண்மைக்கால உலக வரலாற்றில் மிக மோசமான இரண்டு பெரும் அட்டூழியக்காரர்களாக, அழிவு வேலைக்கான சர்வாதிகாரிகளாகக் கணிக்கப்படுபவர்கள் ஹிட்லரும், பொல் பொட்டும்.**

**அவர்களின் பெயரை மாறி மாறி ஒருவருக்கு ஒருவர் சூட்டி, தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் நையாண்டி ஆட்சியைத் தொடர்ந்தாலும், இந்தத் தலைவர்களினால் பேரவலங்களை அனுபவித்த தமிழர்களுக்கு அந்தப் பெயர் சூடல்கள் நையாண்டி விடயமாகத் தோற்றவில்லை.**

**மாறி மாறி அதிகாரத்துக்கு வந்த ஐ.தே.க மற்றும் சுதந்திரக் கட்சி அரசுத் தலைவர்களின் மிக மோசமான இராணுவக் கெடுபிடிக்குள் சிக்குண்டு தங்களது தாயகமான வடக்கிலும், கிழக்கிலும் பல பத்தாயிரம் உறவுகளை இழந்து, மேலும் பல்லாயிரம் உறவுகளை காணாமற்போனவர்களாகத் தொலைத்து, யுத்தத்தின் கோர வடுக்களை மோசமாக சுமந்தபடி இன்றும் – யுத்தம் முடிந்து பத்தாண்டுகளின் பின்னரும் – அல்லாடும் தமிழர்களைப் பொறுத்த வரை, இந்த இராணுவப் பேரழிவைத் தம் மீது சுமத்திய தலைவர்கள் ஹிட்லரும், பொல் பொட்டும் போன்றவர்கள்தான். – நையாண்டிக்கோ, கிண்டலுக்கோ, பரிகாசத்துக்கோ அல்ல; நிஜத்தில் அப்படித்தான்!**

## படைகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டத்தில் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே முதலமைச்சர் இதனைச் சுட்டிக் காட்டினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

மக்கள் பொதுவாக எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அன்றாட வாழ்க்கையில் அவர்களின் கடமைகளுடன் தொடர்புபட்ட பிரச்சினைகள் மேலும் பிரதேசத்தின் தேவைப்பாடுகள் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித் திட்டம் என்பவற்றின் அடிப்படையில் ஜனாதிபதியின் பணிப்பின் கீழ் பிரதமரின் வழிகாட்டலில் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் முன்னெடுக்கப்படும் மக்கள் சேவை நிகழ்ச்சித் திட்டத்தின் 8ஆவது வேலைத் திட்டம் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்படுகின்ற இத் தருணத்தில் உங்கள் முன் உரையாற்றுவதில் மகிழ்வடைகின்றேன்.

வடபகுதியில் வாழுகின்ற மக்கள் ஏனைய பகுதிகளில் வாழுகின்ற மக்களின் தேவைகளை விட அதிக அளவு தேவைகளையுடையவர்கள். போரால் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் பல தேவைகளை அவர்கள் கொண்டவர்களாகக் காணப்படுகின்றார்கள்.

இவை பற்றி விரிவாக இந்த மக்கள் சேவை நிகழ்ச்சித் திட்டத்தில் ஆராயப்படவேண்டும். நீண்டகால ஏக்கத்தில் தமக்கு விடிவு கிட்டாதா என எமது மக்கள் ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கின்ற நிலைமையை அனைவரும் புரிந்து கொண்டிருப்பார்கள் என்று நினைக்கின்றேன்.

இந்த மக்களின் அத்தியாவசிய சேவைகள், அடிப்படைத் தேவைகள் பற்றி அறிந்திருந்தால்தான் அவர்களுக்கு உரிய நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்க முடியும். அரசியல் ரீதியாகத் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் ஒரு புறம், நிர்வாக ரீதியாகத் தீர்க்கப்படவேண்டிய பிரச்சினைகள் மறுபுறம், முதலீட்டுடன் சேர்ந்த பொருளாதார மேம்பாடு சம்பந்தமான பிரச்சினைகள் இன்னொரு புறம், மனிதாபிமான முறையில் தீர்க்கப்படவேண்டிய வேறு சில பிரச்சினைகள் பிறிதொருபுறம் என்று எமது பிரச்சினைகளை அடையாளம் கண்டு அவற்றுக்கு நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்க அரசு முன்வர வேண்டும்.

வெறுமனே அடுத்த வருடம் மார்ச் மாதத்தில் ஜெனீவாவில் அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நடவடிக்கைகளில் இறங்கினால் எமது மக்களின் பிரச்சினைகள் உண்மையாகத் தீர்க்கப்படா.

எமது உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தனவை தனிப்பட்ட முறையில் நான் மிகவும் நேசிக்கின்றேன். மக்கள் பணியாற்றவேண்டும் என்பதில் மிகவும் துடிப்பாக இருப்பவர் அவர். மனிதநேயம் மிக்கவர் அவர்.

அவரின் வருகை எம்மை மகிழ்விக்கின்றது. எமது மக்களின் நீண்டகாலத் தேவைகளைக் கண்டறிந்து உரிய நிவாரணங்களை அவர் பெற்றுக் கொடுப்பார் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

எமது மக்களில் பலர் போரின் விளைவாக உயிர் இழப்புக்களைச் சந்தித்தது ஒருபுறமிருக்க, பொருள் பண்டங்கள், வீடு வளவுகள் என அத்தனையும் தொலைத்துவிட்டு நடைப்பிணங்களாக போர் வடுக்களை உடல்களிலும் உள்ளங்களிலும் சுமந்தவர்களாக சுற்றித்திரிவது எமக்கு மிகுந்த மனவருத்தத்தைத் தருகின்றது.

இந்த மக்களுக்கான இருப்பிட வசதிகள் அவர்களுக்கு ஏற்றவாறு செய்து தரப்படவேண்டும். அவர்கள் வாழ்ந்த நிலங்கள் அவர்கள் தொழில் செய்கின்ற பூமிகள், கடல் வளங்கள், விவசாய நிலங்கள் அவர்களிடம் மீள ஒப்படைக்கப்படவேண்டும்.

ஒரு நாட்டின் பாதுகாப்புக்கு இராணுவம் அவசியமானது. தமது சொந்த நாட்டை ஏனைய நாடுகளின் ஆக்கிரமிப்புக்கள் மற்றும் இராணுவ நடவடிக்கைகளில் இருந்து பாதுகாப்பதற்கும் உள்நாட்டில் அமைதியான சூழ்நிலையை உருவாக்குவதற்கும் இராணுவத்தின் பணி அவசியமானது.

ஆனால் எமது பகுதிகளில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும், உணவகங்களை நடத்துவதற்கும், காணிகளைத் தம் வசப்படுத்தி வைத்திருப்பதற்கும், குளங்களைப் சீரமைப்புச் செய்வதற்கும் இராணுவ வீரர்களின் சேவைகள் தேவைப்படமாட்டாது.

போர் முடிந்து அடுத்த மே மாதம் 10 வருடங்கள் ஆகப் போகின்றது. இன்னமும் எம்மைப் போர்க்கால மக்களாகப் பார்த்து இராணுவக் கண்காணிப்பை முடுக்கி வைத்து வருவது எம் மேல் நம்பிக்கை இன்மையைக் காட்டுகின்றது.

படிப்படியாக இராணுவப் பிரசன்னத்தைக் குறைப்பதாக அரசு உத்தரவாதம் தந்திருப்பினும் அது நடைபெறாமலே இருக்கின்றது. மாறாகக் குற்றச் செயல்கள் இங்கு கூடியுள்ளன. அவற்றைத் தடுக்க எமக்கு அதிகாரங்கள் தரப்படவில்லை.

பொலிஸார் எமது கட்டுப்பாட்டுக்குள் இல்லை. இராணுவம் வெளியேறி பொலிஸ் அதிகாரம் எமக்குக் கையளிக்கப்பட்டால் இன்றைய வன்முறைக் கலாசாரத்தை வடக்கில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது ஒரு பெரியகாரியமன்று. உள்ளூர்வாசிகளை ஆட்கொண்டு வெளியூர்வாசிகள் தமது காரியங்களைச் சாதித்துக் கொள்ள எமது மக்கள் இடம் கொடுக்கமாட்டார்கள்.

இந்த நிலையில் வேலைத் திட்டங்களுக்கான ஒதுக்கீடுகளை இராணுவத்துக்கு வழங்கி அதன் மூலம் எமது வேலைத் திட்டங்களை நிறைவு செய்வதென்பது இந்த நாட்டின் அடிப்படைக் கொள்கைகளுக்கு முரணான ஒரு செயற்பாடாகவே அமையும்.

இதனால்தான் இப் பகுதியில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தின் செறிவைக் குறைக்குமாறு நான் பல இடங்களிலும் எடுத்துரைத்து வருகின்றேன். நீதிபதிகள் போல் இராணுவத்தினரும் ஒதுக்குப் புறமாக இருந்து தமது கடமைகளை ஆற்ற வேண்டும், மக்கள் மனதைத் தம் வசப்படுத்தவேண்டும் என்ற கருத்தில் மக்களுடன் இராணுவத்தினரைச் சேர்ந்து வாழ விடுவது எதிர்காலத்தில் பல சங்கடங்களை ஏற்படுத்தும்.

இராணுவ அதிகாரிகள் மீதோ, போர் வீரர்கள் மீதோ எந்தவிதமான காழ்ப்புணர்ச்சியும் எனக்கு இல்லை. இராணுவ உயர் அதிகாரிகளுடன் நான் சிறந்த உறவை வெளிப்படையாகக் கொண்டிருக்கின்றேன். ஆனால் கொள்கை அடிப்படையில் படையினர் முன்னெடுக்கும் செயற்பாடுகள் கபட நோக்கங்கள் கொண்டிருக்கக் கூடாது.

எம்மை வாழ வைப்பதாகக் கூறிக் கொண்டு எம்மை எஞ்ஞான்றும் கட்டுப்பாடுகளுக்குள் வைக்கப்படவேண்டிய மக்களாக கணித்து வாழக் கூடாது.

நாம் வாழ்வது எமது பாரம்பரிய நிலங்களில். இங்கு இருக்கும் இயற்கை வளங்கள் யாவும் இங்குள்ள மக்களுக்கே சொந்தம். அவற்றைச் சூறையாடிச் செல்வதையோ தொடர்ந்து ஆக்கிரமிப்பில் வைத்து வருவதையோ எமது மக்கள் தொடர்ந்து ஏற்றுக் கொள்வார்கள் என்று எண்ணக் கூடாது.

ஏதாவது எச்சில் துண்டுகளை எறிந்தால் அவர்கள் எம்வசம் இருப்பார்கள் என்றும் எண்ணக் கூடாது. எமது காணிகள் எமக்கு எந்தளவுக்கு முக்கியமோ எமது சுதந்திரமும் எமக்கு மிக முக்கியம்.

எம்முடன் கலந்தாலோசித்தே எமக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். எம்மைப் பங்குதாரர்களாக ஏற்றே எமக்கான நன்மைகள் செய்து தரப்பட வேண்டும். எமக்கான அபிவிருத்திகளை எமக் கூடாகச் செய்ய முன் வாருங்கள். எமக் கூடாக எனும் போது நான் மாகாண நிர்வாகத்தையே சுட்டுகின்றேன்.

எம்மை உங்களுக்குச் சரிசமமானவர்கள் என்று நீங்கள் ஏற்றுக் கொண்டால்தான் பங்குதார வாழ்க்கை பயன் அளிக்கும். அந்த நிலையில் மத்தியும் மாகாணமும் சேர்ந்து வேலை செய்யலாம். திட்டங்களையும் நிதியையூம் உங்கள் கைவசம் வைத்துக் கொண்டு மாகாண அலுவலர்களைக் கொண்டு உங்கள் திட்டங்களை நிறைவேற்றுவதை நாங்கள் கண்டிக்கின்றோம்.

இவற்றை எல்லாம் எமது அமைச்சர் நன்கு புரிந்து கொண்டவர் என எண்ணுகின்றேன். எனவே எமது எதிர்பார்ப்புக்களை நன்கறிந்து எமது மனோ நிலைகளை நன்கு புரிந்து, நீங்கள் இப் பகுதி மக்கள் தொடர்பாக, அவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக, இந்தப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்திகள் தொடர்பாக உயர் அதிகாரிகளுடனும் மக்கள் பிரதிநிதிகளுடனும் தொடர்ந்து வெளிப்படையாகப் பேச்சுக்களை முன்னெடுங்கள்.

அவற்றின் அடிப்படையில் எமது பிராந்தியத்தின் அடிப்படைக் கட்டமைப்புக்கள் சிதைவுறா வகையில், பாரம்பரியங்கள் பழுதுறா வகையில், கலாசாரச் சீரழிவுகள் நடைபெறா வகையில் உயரிய திட்டங்களைத் தீட்டி எம் மக்களுக்கு உதவ முன்வாருங்கள் என வினயமாக வேண்டி எனது உரையை இந்த அளவில் நிறைவு செய்கின்றேன் – என்றார். (ஐ)

### நாளை

**04.07.2018**
**புதன்கிழமை**

நட்சத்திரம் : பூரட்டாதி பி.இ. 12.56 வரை
திதி : பஞ்சமி மு.இ.7.36வரை
சுபநேரம் : 10.27 – 11.57 வரை
இராகுகாலம் : 2.57 – 4.27 வரை

# ‘நியூயோர்க் டைம்ஸ்’ பத்திரிகைக்கும் அரசுக்குமிடையில் தொடர்பு என்ன?

## விசாரணை நடத்தக் கோருகின்றார் நாமல் ராஜபக்ஷ

கொழும்பு,ஜூலை 03

‘நியூயோர்க் டைம்ஸ்’ பத்திரிகையில் வெளியான தகவலைத்தான் அரசும் தெரிவித்து வருகிறது. எனவே அரசுக்கும் இந்த பத்திரிகைக்குமிடையிலான தொடர்பு என்ன? அந்தப் பத்திரிகைக்கு அந்தத் தகவல் எவ்வாறு சென்றது என்பது குறித்து அரசு விசாரணை நடத்த வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ளார்.



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஏற்பாடுசெய்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் மாலை பத்தரமுல்லையிலுள்ள அந்தக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்–

நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகையில் வெளியான செய்தி கடந்த சில தினங்களாக பேசப்பட்டு வருகிறது. மத்திய வங்கி பிணைமுறி மோசடி உள்ளிட்ட விடயங்களை மூடி மறைப்பதற்கு அரசு எடுக்கும் நடவடிக்கையின் ஓர் அங்கமாகவே இந்த செய்தியை நோக்க வேண்டியுள்ளது.

மேலும், அந்தப் பத்திரிகையில் வெளிவரும் செய்திகளின் உண்மைத் தன்மை குறித்து பிரச்சினை உள்ளது. கடந்த காலங்களில் அந்தப் பத்திரிகையில் வெளியான தகவல்கள் பிழையானவை என்பதை அந்தப் பத்திரிகையே பின்னர் ஏற்றுக் கொண்டுள்ளது. மேலும் சிலரின் அரசியல் தேவைகளுக்காக இந்தப் பத்திரிகை தகவல் வெளியிடுவதாகவும் உலகளாவிய ரீதியில் அபிப்பிராயம் உள்ளது.

எனவே, ஜனாதிபதித் தேர்தல் காலத் தில் மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு சீனாவிடமிருந்து அவ்வாறு நிதி கிடைக்கவில்லை என்பதை பொறுப்புடன் கூறிக் கொள்கிறேன்.

மேலும் அந்தப் பத்திரிகை அறிக்கையில் அந்நிதிக்கான காசோலை அலரி மாளிகையில் கையளிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, அர்ஜுன் அலோசியஸிடமிருந்து சிலர் காசோலை பெற்று அதனை பணமாகவும் மாற்றியுள்ளனர். அது குறித்து முறையிடாத சில அரசியல்வாதிகள் அலரி மாளிகையின் நுழைவாயில் காவலர்களிடம் கையளிக்கப்பட்டதாகக் குறிப்பிடும் காசோலை தொடர்பில் நிதிக்குற்றப்புலனாய்வுப் பிரிவில் முறையிட்டுள்ளனர்.

மேலும் ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் றொய்ட்டர் செய்திச் சேவையிலும் இவ்வாறானதொரு தகவல் வெளியாகியிருந்தது. அதன் பின்னர் அரசு துறைமுக நகரத் திட்டத்தை நிறுத்தியதுடன் அம்பாந்தோட்டை துறைமுகத்தின் இரண்டாம் கட்ட அபிவிருத்தித் திட்டங்களையும் நிறுத்திவிட்டு குறித்த நிறுவனம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டது.

பின்னர் ஒன்றரை வருடங்களின் பின்னர் மீண்டும் துறைமுக வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு அரசு அந்த நிறுவனத்திற்கு அனுமதி வழங்கியிருந்தது.

எனவே அரசு எதிர்பார்த்து மேற்கொள்ளும் விசாரணைகளில் தாம் எதிர்பார்க்கும் இலக்கை அடையமுடியாதவிடத்து அதனை ஊடகங்களுக்கு வழங்கி சேறு பூசுவதற்கு நடவடிக்கை எடுக்கிறது. எனவே இந்த விசாரணை அறிக்கை எவ்வாறு நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகைக்கு வெளியிடப்பட்டது?

மேலும்நியூயோர்க்டைம்ஸ் பத்திரிகையில் வெளியான தகவலைத்தான் அரசாங்கமும் தெரிவித்து வருகிறது. எனவே அரசுக்கும் இந்த பத்திரிகைக்கும் இடையிலான தொடர்பு என்ன? அத்துடன், அப்பத்திரிகைக்கு இந்தத் தகவல் எவ்வாறு சென்றது என்பது குறித்து அரசு விசாரணை நடத்த வேண்டும்.

மேலும் அந்தப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள உண்மைக்குப் புறம்பான தகவல் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு சிரேஷ்ட சட்டத்தரணிகளுடன் ஆலோசனை நடத்தியுள்ளோம்.

மேலும், யுத்தத்தை நிறைவு செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்கிய மற்றும் அதிகளவில் முதலீடுகளை மேற்கொண்ட சீனா மற்றும் ரஷ்யா போன்ற நாடுகளுக்கு எதிராக நல்லாட்சி அரசு செயற்படுகிறது.

இது சர்வதேசப் பிரச்சினையாகும். ஜனாதிபதித் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுக்கு சீனா நிதியுதவி வழங்கியதாக குறிப்பிடுகின்றமை சீன அரசுடனான பிரச்சினையாகும்.

மேலும் சீனா, ரஷ்யா போன்ற நாடுகள் எமது நாட்டின் நட்பு நாடுகளாகும். அந்த நாடுகளுக்கு எதிராகவே நல்லாட்சி அரசாங்கம் நடவடிக்கை எடுக்கிறது. ஆகவே மேற்கத்தேய நாடுகளுக்கும் கீழைத்தேய நாடுகளுக்குமிடையிலான பொருளாதாரப் போரில் அரசு சிக்கிக்கொள்ளாது நாட்டுக்குத் தேவையானதைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஒரு மாத காலத்துக்குள் 18 பேர் கைது!

கொழும்பு,ஜூலை 03

பாதாள உலகை கட்டுப்படுத்தும் நோக்குடன் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கடந்த ஜூன் மாதம் மட்டும் முன்னெடுத்த விசேட நடவடிக்கைகளால் பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த 18 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் 6 துப்பாக்கிகளும் அதிரடிப் படையினரால் இந்தக் காலப்பகுதியில் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவர்களில் 8 பேர் ‘குடு அஞ்சு’ எனப்படும் பாதாள உலகக் குழுத் தலைவரின் சகாக்கள் என பொலிஸ் விசேட அதிரடிப்படையின் உயர் அதிகாரி ஒருவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனிடையே இலங்கையில் தொடரும் பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்புடைய குற்றங்



களை வெளிநாட்டிலிருந்து பிரதானமாக 6 பாதாள உலகத் தலைவர்கள் நெறிப்படுத்துவது தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் அவர்களைக் கைது செய்யும் நோக்குடன் அவர்களது சகாக்களை சட்டத்தின் பிடிக்குள் கொண்டுவரும் நடவடிக்கைகளையும் பிரதானமாக பொலிஸ் விசேட அதிரடிப்படை ஆரம்பித்துள்ளது. டுபாயில் இருந்தவாறும் இந்தியாவில் இருந்தவாறும் தமது சகாக்களூடாக இலங்கையில் ஒப்பந்தக் கொலைகள், பழிதீர்க்கும் கொலைகள், கொள்ளை, கடத்தல், கப்பம் பெறல், போதைப்பொருள் விற்பனை உள்ளிட்ட குற்றங்களைச் சிலர் செய்கின்றனர் எனவும் தெரியவந்துள்ளது.

இதுதொடர்பில் பொலிஸ் விசேட அதிரடிப் படையின் பாதாள உலக ஒழிப்புப் பிரிவின் உளவுப்பிரிவு தகவல்களை சேகரித்து வரும் நிலையில், திட்டமிட்ட குற்றங்களை தடுக்கும் பொலிஸ் பிரிவூடாக மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

# ஊர்வலத்தில் யானை மதம் கொண்டதால் 31 பேருக்கு காயம்!



இரத்தினபுரி,ஜூலை 03

காவத்தை பகுதியில் இடம்பெற்ற ஊர்வலமொன்றின் போது யானை ஒன்றுக்கு மதம் பிடித்து தாக்கியதனால் ஊர்வலத்தில் கலந்துகொண்ட 31 பேருக்கு காயம் ஏற்பட்டுள்ளது என காவத்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு காயமடைந்தவர்களில் 19 பெண்களும் 12 ஆண்களும் அடங்குகின்றனர். சம்பவத்தின்போது கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் ஒருவரும் காயமடைந்துள்ளார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டிருந்தது.

இவ்வாறு காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் இரத்தினபுரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

# கத்திக் குத்தில் பெண் பலி; இரண்டு பெண்கள் காயம்

## கத்திக்குத்தை மேற்கொண்டவர் தற்கொலை

மாத்தறை, ஊறுபொக்க பகுதியில் இடம்பெற்ற கத்திக்குத்தில் பெண்ணொருவர் கொல்லப்பட்ட நிலையில் கத்திக்குத்தை மேற்கொண்ட நபர் தன்னைத் தானே கத்தியால் குத்தி தற்கொலை செய்துகொண்டுள்ளார் என ஊறுபொக்க பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

மனநிலை பாதிக்கப்பட்ட நபரே 3 பெண்கள் மீது கத்திக்குத்தை மேற்கொண்டுள்ளார். காயமடைந்த மூவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்



பட்ட நிலையில் அதில் பெண்ணொருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இவ்வாறு உயிரிழந்த பெண் 28 வயதுடையவரென பொலிஸார் தெரிவிக்கின்றனர். இந்தச் சம்பவம் தொடர்பில் ஊறுபொக்க பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வீட்டின் மீது கைக்குண்டு தாக்கு: பெண் உட்பட நால்வர் காயம்!

கொழும்பு,ஜூலை 03

குளியாப்பிட்டிய பகுதியிலுள்ள வீடொன்றின் மீது கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

இதன் போது பெண்ணொருவர் உட்பட நான்கு பேர் காயமடைந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(கு)

# மின்தடை

யாழ்ப்பாணம்,ஜூலை03

உயர் அழுத்த மதாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை–

**வவுனியா பிரதேசத்தில்–**

மலையாபருத்திக்குளம் கிராமம், பண்டாரிக்குளம் கிராமம், தவசிக்குளம் கிராமம், அட்டம்பஸ்கட கிராமம், சுந்தரபுரம் கிராமம், மணிபுரம் கிராமம் ஆகிய பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# சிறுபோக அறுவடை புதிய முறையில் கொள்வனவு

## நெல் சந்தைப்படுத்தல் சபை திட்டம்



விவசாயிகளின் சிறுபோக அறுவடையை புதிய முறையின் கீழ் கொள்வனவு செய்வதற்கு தயாராக இருப்பதாக நெல் சந்தைப்படுத்தல் சபை தெரிவித்துள்ளது.

இம்முறை ஒரு லட்சத்து 20 ஆயிரம் மெற்றிக் தொன்னை கொள்வனவு செய்வது நெல் சந்தைப்படுத்தல் சபையின் இலக்காகும். நெல்லைக் கொள்வனவு செய்வதற்காக தேவையான நிதியைப் பெற்றுக் கொள்வதற்காக அமைச்சரவையின் பரிந்துரை இந்தவாரத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் உபாலி மொஹொட்டி தெரிவித்துள்ளார்.

ஓகஸ்ட் மற்றும் செப்ரெம்பர் மாதம் அளவில் சிறுபோக அறுவடை சந்தைக்கு வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது

# தினசரி ராசி பலன் (03.07.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் ஆனித்திங்கள் 19 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை பஞ்சமித்திதி இரவு 10.28 மணி வரை பின்னர் ஷஷ்டி. நட்சத்திரம்: சதயம் பி.இ.3.14 மணி வரை பின்னர் பூரட்டாதி. மரணயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - மாலை 3.24 மணி முதல் 4.58 மணி வரை.

**சுபநேரம்** - பகல் 10.29 மணி முதல் 11.59 மணி வரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி** - ஆனி மாத தேய்பிறை பஞ்சமி.

**பிறந்த நட்சத்திர வழிபாடு** - சதயம்.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** நன்மையான நாள். பணப்புழக்கம் மன நிறைவைத் தரும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். ஆன்மிக எண்ணங்கள் உதயமாகும். சுய தொழில் செய்பவர்களுக்கு முன்னேற்றமான சூழ்நிலை உருவாகும்.

**ரிஷபம்** மத்திமமான நாள். பொருளாதாரம் சுமாராக இருக்கும். தேவையற்ற வீண் செலவுகள் உண்டாகும். எண்ணிய காரியங்கள் தாமதமாகும். வியாபாரத்தில் மத்திம லாபம் கிடைக்கும்.

**மிதுனம்** ஆக்கபூர்வமான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். பெண்கள் குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்வார்கள். குடும்ப உறவு மேம்படும். வெளிநாட்டுத் தொடர்புகளால் வியாபாரம் அபிவிருத்தி அடையும்.

**கடகம்** அலைச்சல் மிகுந்த நாள். பணம் தட்டுப்பாடாக இருக்கும். சிலர் வேலை தேடி அலைவார்கள். சிலர் சொந்த வீடு வாங்கும் எண்ணத்தில் தகுந்த இடத்தைத் தேடித் திரிவார்கள்.

**சிம்மம்** மத்திமமான நாள். வரவும், செலவும் சரிசமமாக இருக்கும். எதிர்பார்த்த பணம் வரத் தாமதமாகும். தேகசுகம் பாதிக்கப்படும். குடும்பத்தில் ஓரளவு அமைதி நிலவும். திட்டமிட்ட வெளிநாட்டுப் பயணம் தாமதம் ஆகும்.

**கன்னி** நன்மையான நாள். பணப்புழக்கம் திருப்தியைத் தரும். பிரிந்த உறவுகள் வந்து சேர்வார்கள். உழைப்புக்கு தகுந்த ஊதியம் கிடைக்கும். தொழிலில் இருந்த போட்டிகள் மறையும். குடும்பத்தில் ஒற்றுமை அதிகரிக்கும்.

**துலாம்** மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும். சகோதர உறவு வலுவடையும். இதுவரை பிரிந்திருந்தவர்கள் மீண்டும் ஒன்று சேர்வார்கள்.

**விருச்சிகம்** கவலையான நாள். வருமானம் குறைவடையும். குடும்பப் பிரச்சினைகள் அதிகரிக்கும். தொழிலில் பல இடைஞ்சல்கள் ஏற்படும். தேகாரோக்கியம் பாதிப்படையும். கொடுக்கல், வாங்கலில் பிரச்சினைகள் உண்டாகும்.

**தனுசு** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் ஏற்றமும், இறக்கமுமாக இருக்கும். தேகசுகம், குடும்ப சுகம் சீராக இருக்கும். வியாபாரம் ஏறு, இறங்குமுகமாக நடக்கும். உத்தியோகத்தில் வேலைச் சுமை அதிகரிக்கும்.

**மகரம்** மேன்மையான நாள். பொருளாதாரம் தேவைகளைப் பூர்த்தி செய்யும். குடும்பத்தில் நெருக்கம், பாசம் அதிகரிக்கும். சகோதர உறவு பலப்படும். எண்ணிய காரியங்கள் நிறைவேறும்.

**கும்பம்** அதிர்ஷ்டமான நாள். தனலாபம் பெருகும். குடும்ப உறவில் பாசமும், நேசமும் கலந்திருக்கும். சிலருக்கு உத்தியோக உயர்வுகளால் வெளிநாடு சென்று தொழில் புரியும் வாய்ப்புண்டாகும்.

**மீனம்** சலனம் மிகுந்த நாள். பணம் பற்றாக்குறையாக இருக்கும். குடும்பத்தில் உட்பூசல்கள் காணப்படும். பிள்ளைகளால் தொல்லைகள் உருவாகும். உத்தியோகத்தர்கள் தொழிலில் கவனம் எடுக்க வேண்டும்.

சந்திராஷ்டம நாள்; **புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் சுப கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# கூட்டு எதிர்க்கட்சியில் வெடிப்பு மிக விரைவிலேயே ஏற்படும்

## அமைச்சர் மஹிந்த சமரசிங்க கருத்து



மஹிந்த ராஜபக்ஷவின் செல்வாக்கில் காணப்படும் கூட்டு எதிர்க்கட்சியில் ஜனாதிபதித் தேர்தலுக்கு வேட்பாளர்களைத் தீர்மானிக்கும் போது வெடிப்பு ஏற்படும் என அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

மஹிந்த ராஜபக்ஷ அரசியலில் இருந்து ஓய்வெடுக்கப் போகும் காலம் மிக தொலைவில் இல்லை.

மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவில் தான் அக்கூட்டணி தாக்குப் பிடிக்கின்றது என்பது அனைவரும் அறிந்த உண்மை. மஹிந்த ராஜபக்ஷ அரசியலில் நீண்ட காலம் இருக்க முடியாது. அவர் ஓய்வு பெற்றவுடன் அக் கட்சியின் முகவரி இல்லாமல் போகும் எனவும் அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார்.

## இலங்கையில் இடம்பெறும் 75 வீதமான

# இயற்கை மரணங்களுக்கு தொற்றா நோயே காரணம்

கொழும்பு,ஜூலை 03

இலங்கையில் இடம்பெறும் மரணங்களில் 75 வீதமானவை தொற்றா நோய்களால் ஏற்படுகின்றன என்று உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த 2015 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் இலங்கையில் ஐ.நா. பிரதிநிதிகள் குழுவொன்று ஆய்வு செய்துள்ளது. இந்த ஆய்வின் முடிவில் இவ்வுண்மை கண்டறியப்பட்டுள்ளது.



மதுபாவனை, புகையிலைப் பாவனை, முறையற்ற உணவுப் பழக்கம் இதற்குக் காரணம் எனவும் அந்த நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

# காரைநகர் களபூமி ஆலய மகோற்சவம்

காரைநகர், ஜூலை 03

காரைநகர் களபூமி திக்கரை அருள்மிகு முருகமூர்த்தி ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட திருமஞ்சம் வெள்ளோட்டமும் 11 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிக்கு இரத்தோற்சவமும் மறுநாள் வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு தீர்த்தோற்சவமும், வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு 1008 சங்காபிஷேகமும் இரவு 8 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறும். (இ)

# மாதாந்தக் கூட்டத்தில் பொலிஸ் – பிரஜைகள் குழுவினர்





யாழ்ப்பாணம்,ஜூலை 03

யாழ். பொலிஸ் நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை பொலிஸ் – பிரஜைகள் குழுவின் மாதாந்தக் கூட்டம் நடைபெற்றது. யாழ் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வர்ணகுல ஜெயசூரிய மற்றும் பொலிஸ் தலைமை அதிகாரி, பிரதான பொலிஸ் இன்ஸ்பெக்டர் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்ட இக் கூட்டத்தில் யாழ் நகரில் தற்போது அதிகரித்துள்ள குற்றச் செயல்கள் தொடர்பில் பிரஜைகள் குழு உறுப்பினர்களுடன் விரிவாக ஆராய்ந்தனர்.

ஆவா குழு என்ற பெயரிலே ஒரு சில இளைஞர்களே ஈடுபடுகின்றனர். இவர்களை பெரிதுபடுத்தி மக்கள் மத்தியில் பிழையான கருத்தையும், பீதியையும் ஏற்படுத்தும் வகையில் சமூக விரோத சக்திகள் செயற்படுகின்றன. இந் நிலையில் பெற்றோர்கள் மற்றும் பிரஜைகள் குழுவினர் பொலிஸாருக்கு உரிய நேரத்தில் ஆலோசனையும், தகவலும் தர வேண்டும். அத்துடன் இளைஞர்களையும், பெண் பிள்ளைகளையும் பெற்றோர்கள் கண்காணிக்க வேண்டிய கடமையும் உண்டு என்றும் அறிவுறுத்தப்பட்டது.

கைது செய்யப்படும் குற்றவாளிகள் பிணையில் செல்வது நீதிமன்றச் செயற்பாடாகும் என்றும் கூறப்பட்டது. (இ-19)

அடுத்த வருடத்தின் இறுதிக்குள்

# நாட்டின் அபிவிருத்தி கருதி துரிதமான பணிகள் ரூ.20 ஆயிரம் கோடி செலவில் முன்னெடுப்பு

கொழும்பு, ஜூலை 03

நாட்டில் துரிதகதியில் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளோம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் அடுத்த வருட இறுதிக்குள் 20,000 கோடி (200 பில்லியன்) ரூபா வரை பெறுமதிகொண்ட அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படும். அடுத்து வரும் மூன்று – நான்கு வருடங்களில் நாட்டின் பொருளாதாரஇம் கணிசமான வளர்ச்சி அடையும். அதன்பின்னர் நாட்டு மக்களுக்கு விசேட சலுகைகளும் பெற்றுக்கொடுக்கப்படும் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.





## பிரதமர் ரணில் தெரிவிப்பு

நேற்றுமுன்தினம் கண்டி பன்னில கெலேபொக்க அரச பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு பிரதேசத்தில் காணி உறுதிப் பத்திரங்களை கையளிக்கும் நிகழ்வில் பிரதமர் உரையாற்றினார்.

இதன்போது பிரதமர் மேலும் தெரிவித்ததை வருமாறு–

2015 ஆம் ஆண்டு மோசமான நிலையில் இருந்த நாட்டின் பொருளாதாரத்தைக் கிரமமான முறையில் விருத்தி அடையச் செய்வது குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் துரிதகதியில் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்க நாம் திட்டமிட்டுள்ளோம்.

இதனடிப்படையில் அடுத்த வருட இறுதிக்குள் 16 ஆயிரம் கோடி ரூபா முதல் 20 ஆயிரம் கோடி வரை பெறுமதிகொண்ட அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

அடுத்த வரும் மூன்று – நான்கு வருடங்களில் நாட்டின் பொருளாதாரம் கணிசமான வளர்ச்சி அடையும். அதன் பின்னர் நாட்டு மக்களுக்கு விசேட சலுகைகளும் பெற்றுக்கொடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார் .

இந்த நிகழ்வின் போது தலா ஏழு பேர்ச் நிலப்பரப்பை கொண்ட காணிகளுக்கான உறுதிப் பத்திரங்களும் தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டன.

(கு)

# ரூ.2 கோடி 90 லட்சம் செலவில் களுத்துறை மக்களுக்கு தனி வீடு



களுத்துறை, ஜூலை 03

களுத்துறை மாவட்டத்தில் அரபொலகந்த தோட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட 29 தனி வீடுகள், பெருந்தோட்ட பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

இது தொடர்பான நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்த வீடுகளைச் சுகாதார போஷாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன பயனாளிகளிடம் கையளித்தார்.

மலைநாட்டு புதிய கிராமங்கள் உள்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு இரண்டு கோடி 90 லட்சம் ரூபா செலவில் இந்த வீடுகளை அமைத்துள்ளது. ஒவ்வொரு வீடும் தலா 7 பேர்ச் காணியில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வின் போது 10 லட்சம் ரூபா செலவில் கொங்கிறீட் இடப்பட்டு சீர்செய்யப்பட்ட பாதையும் மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் பின்னகொடவித்தான, மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ரஞ்சினி நடராஜபிள்ளை மற்றும் மனிதவள நிதியத்தின் தலைவர் புத்திரசிகாமணி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# 'டிகிரி சக்தி' பிஸ்கட் வழங்கும் திட்டத்தின் கீழ் சிறாருக்கு பிஸ்கட்

களுத்துறை, ஜூலை 03

களுத்துறை மாவட்டத்தில் அரபொலகந்த தோட்ட சிறார்களுக்கு பிஸ்கட்கள் வழங்கப்பட்டன.

பெருந்தோட்ட சிறார்களின் போசணை மட்டத்தை அதிகரிப்பதற்கான 'டிகிரி சக்தி' பிஸ்கட் வழங்கும் திட்டத்தின் கீழ், சிறார்களுக்கு பிஸ்கட்களை சுகாதார போஷாக்கு மற்றும் சுதேச வைத்தியத் துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன நேற்றுமுன்தினம் வழங்கினார்.

2 தொடக்கம் 5 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கு இந்த பிஸ்கட்கள் விநியோகிக்கப்பட்டன.



இந்த நிகழ்வில் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் பின்னகொட வித்தான, மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ரஞ்சினி நடராஜபிள்ளை மற்றும் மனிதவள நிதியத்தின்தலைவர் புத்திரசிகாமணி உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# முன்னாள் மத்திய வங்கி ஆளுநரின் கூற்று திறைசேரியினால் நிராகரிப்பு

கொழும்பு, ஜூலை 03

2017 ஆம் ஆண்டுக்காக திறைசேரி பகிரங்கப்படுத்திய மொத்த உற்பத்தியில் அரச கடன் மற்றும் மொத்த உற்பத்தியை ஒன்றுடன் ஒன்று ஒப்பிடுகையில் இதன் வேறுபாடுகளைக் காணமுடியும் என்று முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

இந்தக் கூற்றை திறைசேரி நிராகரித்துள்ளது. நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சு அறிக்கையில் இது தொடர்பாக விளக்கமளித்துள்ளது.அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு–

முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் இந்த விடயங்களைத் திரிபுபடுத்தியுள்ளார். அடிப்படையில் உண்மையான விடயங்களை மறைக்க முயற்சித்துள்ளார்.

கப்ரால் 2017 ஆம் ஆண்டுக்கு எனக் கூறி கடன் மற்றும் மொத்த உற்பத்திக்கு இடையில் 3 சதவீத வித்தியாசம் இருப்பதாகக் குறிப்பிட்டார். 2010 தொடக்கம் 2013ற்கு இடையில் அக்காலப்பகுதியில் நிதியமைச்சரின் முன்மொழிவுகள் மற்றும் அமைச்சரவை மேற்கொண்ட தீர்மானங்களுக்கு அமைவாக, முக்கிய அரச தொழில்துறைகள் பல பெற்றுக் கொண்ட கடன்கள், அப்போதைய அரச நிதி அறிவிப்பில் உள்ளடக்கப்படவில்லை.

இதற்கமைவாக, முன்னைய அரசு காலப்பகுதியில், புத்தளம் அனல்மின் நிலையம், ஹம்பாந்தோட்டை துறைமுகத்திட்டம், மத்தள விமான நிலையம் போன்ற திட்டங்களுக்காகப் பெற்ற கடன் தொகை செலுத்த வேண்டியுள்ளன.

இந்தக் கடன்கள் மத்திய அரசின் நிதி அறிவிப்பில் நீக்கப்பட்டு இலங்கை மின்சார சபைக்கும், இலங்கை துறைமுக அதிகார சபைக்கும், விமான நிலையத்துக்கும், விமான சேவைகள் அதிகார சபைக்குமாக உட்படுத்தப்பட்டிருந்தது.

அவ்வாறு செய்யப்பட்ட இந்தக் கடன்கள், சம்பந்தப்பட்ட அரச தொழில்துறை ஊடாக மீண்டும் செலுத்த முடியும் என்ற தவறான நிலைப்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்து. அரசு பெற்றுக் கொண்ட இந்தத் தீர்மானத்தின் முன்னிலையில், அன்று மத்திய வங்கியின் ஆளுநர் என்ற வகையில் பணியாற்றிய கப்ரால், இன்று அரச தொழில்துறையில் நிலவும் கடன் அரசாங்கத்தின் நிதி அறிவிப்பிற்குள் உள்வாங்கப்படாமை குறித்து கருத்து வெளியிட்டுள்ளார்.

கொள்கை ரீதியான தீர்மானத்தை மேற்கொள்ளாது கடன் மற்றும் மொத்த உற்பத்திக்கு இடையிலான வித்தியாசங்களை



திரிபுபடுத்திக் காட்டுவதற்கு முயற்சித்துள்ளார்.

இது கவலைக்குரிய விடயமாகும் என்றும் திறைசேரி தெரிவித்துள்ளது. திறைசேரி கடன் மற்றும் தேசிய உற்பத்தி விகிதங்கள் தொடர்பிலோ, 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள் செலுத்த வேண்டி இருந்த பெரும் கடன் சுமையை மறைப்பதற்கு எதுவும் இல்லை.

வரலாற்றிலேயே இதுவரையில் பதிவான ஆகக்கூடிய கடன் தொகை 2.4 ட்ரில்லியன் ரூபாவாகும். இதனை நல்லாட்சி அரசு செலுத்த வேண்டியுள்ளது.

இந்தத் தொகையில் 77 சதவீதம் 2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் பெறப்பட்ட காலங் கடந்த கடன் தொகைக்கு ஏற்ப செலுத்த வேண்டியதாகும். மொத்த உற்பத்தி மற்றும் அரசாங்கத்தின் புள்ளிவிவரங்களுடன் ஒப்பிட்டு விகிதங்களை கணிப்பீடு செய்வதில் திறைசேரி, தொகை மதிப்பீட்டு புள்ளிவிபரத் திணைக்களத்தின் மீது நம்பிக்கை கொண்டுள்ளது.

இதனால் கப்ராலின் கணக்கீடு மிகவும் பொருத்தமற்றது. இது தொடர்பில் கருத்துத் தெரிவிப்பதற்கு அவசியமில்லை என்று திறைசேரி தெரிவித்துள்ளது.

அரசின் கடன் தொடர்பிலான தரவுகள் குறித்து நம்பிக்கையுடன் கருத்து வெளியிடுவதற்கு அன்று நாட்டின் பொருளாதாரம் முழுமையாக புறக்கணிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்ட கடன் முகாமைத்துவ முறை சவாலுக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

நிதியை ஒன்றிணைக்கும் பொழுது நம்பிக்கையான கட்டமைப்பின் ஊடாக மத்திய கால கட்டமைப்பிற்குள் அரசாங்கம் கடனை ஒன்றிணைப்பதற்கு தற்போதைய அரசு அர்ப்பணித்துள்ளது.

அரசின் நிதி ஒன்றிணைப்புத் திட்டத்தை அடையாளம் கண்டுள்ள சர்வதேச நிதி மற்றும் உலக வங்கி போன்ற சர்வதேச நிறுவனங்கள் இந்த நாட்டின் மத்திய கால கடன் மற்றும் தேசிய உற்பத்திக்கு இடையிலான விகிதங்களை கொண்டிருப்பதாக சுட்டிக்காட்டியுள்ளனமை குறிப்பிடத்தக்கது.

## காலி கடற்படை முகாம் தாக்குதல் வழக்கு:

# குற்ற ஒப்புதல் வாக்குமூலம் நிராகரிப்பு

### சிரேஷ்ட சட்டத்தரணி தவராசாவின் வாதத்தை அடுத்து

காலி கடற்படை முகாம் தாக்குதல் வழக்கில் சிரேஸ்ட சட்டத்தரணி கே.வி.தவராசாவின் வாதத்தையடுத்து அரச தரப்பின் முக்கிய சான்றாக முன்வைக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை காலி மேல் நீதிமன்ற நீதிபதி நிராகரித்தார்

2006ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 18 ஆம் திகதி காலி தெற்கு கடற்படை முகாமை தாக்கி கடற்படையை சேர்ந்த கனக சுரங்கவிற்கு மரணத்தை ஏற்படுத்தியதுடன் 22 பேருக்கு கடும் காயங்களை ஏற்படுத்தி கொலை செய்வதற்கு எத்தனித்ததாக 23 குற்றச்சாட்டுக்கள சுமத்தப்பட்டு பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ் காலி மேல் நீதிமன்றில் 2010ம் ஆண்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

உள்நாட்டு யுத்தத்தின் இறுதிகாலகட்டமான 2009ல் இராணுவத்தினால் கைது செய்யப்பட்டு பயங்கரவாத விசாரணை பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்ட புதுக்குடியிருப்பை வசிப்பிடமாகக் கொண்ட கந்தையா இளங்கோ மற்றும் காலியை பிறப்பிடமாகக் கொண்ட நால்வருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கில் எதிரிகளால் வழங்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலங்களும் 77 சாட்சிகளும் 27 தடயப்பொருள்களும் குற்றச்சாட்டுப் பத்திரத்தில் அரச தரப்பு சான்றாக பெயரிடப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்கு 2014 ஆம் ஆண்டு முதல் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது

பயங்கரவாத தடைப்பிரிவின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு இந்த வழக்கின் முதலாம் எதிரியான கந்தையா இளங்கோவினால் சுயவிருப்பில் வழங்கப்பட்டதாக அரச தரப்பால் முன்வைக்கப்பட்ட குற்றஒப்புதல் வாக்குமூலத்தின் உண்மைத்தன்மை தொடர்பிலான விசாரணையில் அரச தரப்பின் சாட்சியங்களும் எதிரி தரப்பு சாட்சியங்களும் விசாரித்து நிறைவடைந்ததையடுத்து

அரச சட்டத்தரணி தனது சமர்ப்பணத்தில் முதலாம் எதிரியான கந்தையா இளங்கோ விடுதலைப்புலிகளின் இயக்கத்தின் முக்கிய செயல்பாட்டாளர் என்பதுடன் தெல்லிப்பழையை பிறப்பிடமாகக் கொண்ட இந்த எதிரி, புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்திற்கு வந்து புலித் தலைமையகத்தின் கட்டளையின் பிரகாரம் செயல்பட்டவராவர்

மேலும் அரச படைகளுக்கு எதிராக யுத்தக்களத்தில் தாக்குதல்களை நடத்திய போது கண்ணிவெடியில் சிக்கியே இந்த எதிரி ஒரு காலை இழந்ததுள்ளார்

எதிரியின் உடலில் உள்ள காயங்கள் ஆயுதப் பயிற்சியினாலும் ஆயுதப் போராட்டத்திலும் ஏற்பட்ட காயங்கள் என்பதுடன் பொலிஸாரின் எந்த விதமான சித்திரவதையும், அச்சுறுதலும் இல்ல மல் சுய விருப்பத்திலேயே எதிரி குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு வழங்கியுள்ளார் என அரச சட்டத்தரணி தனது வாதத்தை முன்வத்தார் எனினும் அரச சட்டத்தரணி முன்வைத்த சமர்ப்பணத்திற்கு கடும் ஆட்சேபனை தெரிவித்த முதலாம் எதிரியின் சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி.தவராசா தனது சமர்ப்பணத்தில்-

அரச சட்டத்தரணியின் சமர்ப்பணம் நீதிமன்றத்தால் ஏற்றுக் கொள்ள முடியாததும் சட்டரீதியற்றதுமான வாதமாகும்

இந்த நீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணை முதலாம் எதிரியான கந்தையா இளங்கோவினால் உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு வழங்கப்பட்ட வாக்குமூலம் சுயவிருப்பில் வழங்கப்பட்டதா? இல்லையா என்பதை மட்டுமே தீர்மானிக்க நடைபெறும் விசாரணையாகும்

இரு பிரதான வழக்கு விசாரணையல்ல என்பதை நீதிமன்ற கவனத்திற்கு கொண்டுவதோடுஇந்த வழக்கின் முதலாம் எதிரி தனது சாட்சியத்தில் தான் சுய விருப்பத்தில் எந்த வாக்குமூலமும் பொலிஸாருக்கு வழங்கவில்லையெனவும் 2009ம்ஆண்டு பயங்கரவாதத் பொலிஸார் தன்னை பூசா முகாமிற்கு கொண்டுவந்துதடுத்துவைத்துவிசாரணை நடத்தியபொழுது விசாரணையாளரான இம்தியாஸ் தன்னிடம் அரசாங்கம் 12.000 போராளிகளுக்கு புனர்வாழ்வு வழங்கியுள்ளது உமக்கு ஒரு காலும் இல்லை நீ உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் காண்பிக்கும் இடத்தில் கையெழுத்து வைத்தால் உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் உனக்கு விடுதலை வாங்கித்தருவார் அல்லது புனர்வாழ்விற்கு அனுப்புவார்கள் என தனக்கு வாக்குறுதி அளித்தநால் தன்னை விடுதலை செய்வார்கள் என்ற நம்பிக்கையில் தான் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கையெழுத்து வைக்கும்படி காட்டிய இடத்தில் கையெழுத்து வைத்தேன் என சாட்சியளித்துள்ளார்.

மேலும் எதிரி தனக்கு எவ்வாறு உடலில் காயங்கள் ஏற்பட்டன எந்த சூழ்நிலையில் தனது காலை இழந்தார் என்பதை தனது சாட்சியத்தில் குறிப்பிடும் பொழுது விமானக் குண்டுத் தாக்குதலிருந்து தப்பிக்க தானும் மக்களுடன் சிதறி ஓடிய பொழுது தான் கண்ணிவெடியில் சிக்கி காலை இழந்ததுடன் உடலில் பல காயங்கள் ஏற்பட்டன எனவும் நூற்றக்கணக்கான பொதுமக்களும் படுகாயங்களுக்கு உள்ளானார்கள் எனவும் கூறியுள்ளார்.

மேலும் எதிரியின் சாட்சியத்தினை குறுக்கு விசாரணை செய்த அரச சட்டத்தரணி எதிரியை விடுதலைப்புலிகளின் இயக்கத்தின் முக்கிய செயல்பாட்டாளர் என்பதை நிரூபிக்க முயற்சித்தாரே தவிர எதிரியால் வழங்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயவிருப்பில் வழங்கப்பட்டதா? இல்லையா என்பதை மட்டுமே தீர்மானிக்க நடைபெறும் விசாரணை என்பதை கவனத்தில் கொள்ளவில்லை

ஆனால் எதிரியால் வழங்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயவிருப்பத்தில் வழங்கப்படவில்லை என்பதை சட்டரீதியாக எனது வாதத்தில் முன்வைத்துள்ளேன் என தனது வாதத்தை எதிரியின் சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி.தவராசா முன்வைத்தார்.

அதை அடுத்து காலி மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுல திலகரத்ன எதிரியின் சட்டத் தரணி கே வி. தவராசாவின் சட்ட வாதத்தை ஏற்று அரச சான்றாக சட்டமா அதிபரினால் முன்வைக்கப்பட்ட எதிரியால் வழங்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயவிருப்பில் வழங்கப்படவில்லையெனக் குறிப்பிட்டு அரச தரப்பு விண்ணப்பத்தை நிராகரித்து தீர்ப்பு வழங்கினார்

இந்த வழக்கில் சட்டமா அதிபர் சார்பில் சிரேஷ்ட அரச சட்டத்தரணி மொகமட் பாரி ஆஜரானதுடன் முதலாம் எதிரியின் சார்பில் சட்டத்தரணி செல்வி தர்மஜா தர்மராஜாவின் அனுசரணையில் சிரேஷ்ட சட்டத்தரணி கே வி தவராசா ஆஜரானார்.

# தமிழக படகுகளை இலங்கையிடமிருந்து மீட்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்



### ஜி.கே.வாசன் வலியுறுத்து

சென்னை,ஜுலை03

இலங்கையில் உள்ள தமிழக மீனவர்களின் படகுகளை மீட்கவும், சேதமடைந்த படகுகளுக்கு நிவாரணத்தைப் பெற்றுத்தரவும் தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக ஜி.கே.வாசன் நேற்று வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு

ராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் கடந்த சனிக்கிழமை கடலுக்கு விசைப் படகுகளில் மீன்பிடிக் கச் சென்றனர். வலைகளை விரித்து மீன்பிடிக்க முயன்ற போது அங்கு வந்த இலங்கைக் கடற்படை மீனவர்களை சுற்றி வளைத்து அச்சுறுத்தினர். இதனால் மீனவர்கள் பயந்த நிலையில் மீன்பிடி வலைகளை அப்படியே கடலில் தூக்கி எறிந்து விட்டு கரை திரும்பினர்.

இலங்கை கடற்படையின் இந்த அத்துமீறல் மிகவும் கண்டிக்கத்தக்கது.

எனவே மத்திய, மாநில அரசுகள் மீனவர்கள் பிரச்சினையில் முக்கிய கவனம் செலுத்தி அவர்களின் வாழ்வாதாரமான மீன்பிடித் தொழிலுக்கு பாதுகாப்பை கொடுக்க தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டும். அது மட்டுமல்ல மத்திய பா.ஜ.க. அரசு இலங்கை அரசோடு தொடர்பு கொண்டுதமிழக மீனவர்களுக்கு இலங்கைக் கடற்படையால் ஏற்படும் தொடர் இன்னல்களுக்கும், துன்பங்களுக்கும், பாதுகாப்பற்ற தன்மைக்கும் முற்றுப் புள்ளி வைக்கும் வகையில் அழுத்தம் கொடுத்து பேச்சு நடத்த வேண்டும்.

மேலும் கடந்த காலங்களில் தமிழக மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்குச் சென்ற போது இலங்கை கடற்படை தமிழக மீனவர்களின் படகுகளை சிறைப் பிடித்துச் சென்று இலங்கையில் வைத்துள்ளனர். கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் சிறை பிடிக்கப்பட்ட தமிழக மீனவர்களுக்கு சொந்தமான படகுகளின் எண்ணிக்கை சுமார் 226. இந்த படகுகளை எல்லாம் உடனடியாக மீட்டுக் கொடுக்க வேண்டும் என்று மீனவர்கள் தொடர்ந்து கோரிக்கை வைத்து வருகின்றனர்.

எனவே தமிழக அரசு தமிழக மீனவர்களுக்குச் சொந்தமான படகுகள் அனைத்தையும் மீட்டுக் கொண்டுவரவும், சேதமடைந்த படகுகளுக்கு உரிய நிவாரணத்தைப் பெற்றுத்தரவும் துரிதமான நடவடிக்கைகளை மேற்கொள்ள மத்திய அரசை வலியுறுத்த வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.



யாழ்ப்பாணம் கோட்டை முதியோர் சங்கத்தின் புதிய நிர்வாகம், சங்க உறுப்பினர்களுக்குக் குலுக்கல் மூலம் மாதாந்தம் பத்து பேர் தெரிவு செய்யப்பட்டு ஊக்குவிப்புத் தொகை வழங்கப் படும் என உறுதியளித்திருந்தது அதன் படி கடந்த மாதாந்த பொதுக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பத்துப் பேருக்கு சங்கத் தலைவர் தேசமாணி செல்லையா விஜயரட்ணம் சம்பிரதாய பூர்வமாக ஊக்குவிப்புத் தொகையாக ரூபா 500 வழங்கி ஆரம்பித்து வைத்தார்.

இந் நிகழ்வில் உரையாற்றிய தலைவர் 'முதியோர்களின் நலனில் அக்கறையுள்ளவர்கள் இந் நிதியை வழங்கியதுடன் மாதாந்தம் இந் நிதியை வழங்க முன் வந்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்க விடயமாகும். இது போன்று ஏனையவர்களும் முதியோர்களுக்கு உதவ முன்வர வேண்டும்' எனக் கேட்டுக் கொண்டார். (இ



மறவன்புலவு
க.சச்சிதானந்தன்

# தமிழ்ப் பண்பாட்டுத் தொட்டில்கள்

‘வடமாகாணத்துக்குச் சுற்றுலா நுழைவோராக வரும் நாகசுர – தவில் கலைஞர்கள், ஈழத்துக் கோவில்களில் நாகசுரம் தவில் வாசித்து உழைக்கிறார்கள். சுற்றுலா நுழைவோர் விதிகளுக்குப் புறம்பாக நடக்கிறார்கள். வடமாகாண முதலமைச்சர் காவல்துறை வழியாக உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறானவர்களைத் தடுப்பதன் மூலம் உள்ளூர்க் கலைஞர்கள் தொழில் வாய்ப்புப் பெற ஆவன செய்யவேண்டும்.’

இவ்வாறான கோரிக்கை கொண்ட உரையை வடமாகாண சபை அமர்வுகள் ஒன்றில் எதிர்க் கட்சித் தலைவர் சின்னத்துரை தவராசா ஆற்றினார் என செய்தித் தாள்களில் படித்தேன்.

தமிழகத்துக்கும் ஈழத்துக்கும் இடையே பயணங்கள் பல்லாயிரம் ஆண்டுகளாகத் தொடர்கின்றன. 1948க்குப் பின்னரே நுழைவிசைவு பெற்று இருநாட்ட வரும் ஒருவர் மற்றவர் நாட்டுக்குப் பயணிக்கின்றனர்.

இருந்தாலும் நுழைவிசைவு பெறாத பயணங்கள் இன்று வரை தொடர்கின்றன.

இலங்கைக்கு வருவோர் நான்கு வகையான நுழைவிசைவுகள் பெறலாம்.

1. சுற்றுலா நுழை விசைவு,
2. தொழில் செய்யும் நுழைவிசைவு,
3. அரசப் பணி / கல்வி நுழைவிசைவு,
4. சிறப்பு நுழைவிசைவு.

எதுவாயினும் ஆகக்கூடியது ஓராண்டு கால எல்லை கொண்டது.

தமிழகத்தில் இருந்து வருகின்ற 99% பயணிகள் சுற்றுலா நுழைவிசைவிலேயே வருகின்றனர். மிக மிகச் சிலரே ஏனைய நுழைவிசைவுகளைப் பெறுவர்.

2009க்குப் பின்னர், தமிழகத்தின் நான்கு வானூர்தி முனையங்களான, சென்னை, திருச்சி, மதுரை, கோவை முனையங்களில் இருந்து வருவோரில், சுற்றுலா நுழைவிசைவில் வருவோரில் குருவிகள் என அழைக்கின்ற வணிகப் பொருள் காவுநரே பெருமளவினர். இவர்க ளுக்காகவே வானூர்தி நிறுவனங்கள் பல சலுகைகளை வழங்கி ஊக்குவிப்பர்.

எந்த ஒரு வானூர்தியிலும் 30 – 40% பயணிகள் குருவிகள். இந்திய இலங்கை அரசு விதிகளுக்குள் இவர்கள் வணிகப் பொருள் காவுநராக வந்து போனாலும், சுங்க அலுவலர்களின் விதிகளுக்கு அப்பாலான ஒத்துழைப்பால், இலங்கை அரசின் அந்நியச் செலாவணி இழப்புகள் கணிசமானதாகும்.

தங்கக் கடத்தல், போதைப் பொருள் கடத்தலுக்குக் குருவிகளின் பங்களிப்புக் கணிசமானது. கறுப்புப் பண, வங்கிசாரா அந்நிய நாணய மாற்றலால், கடத்தலால் இலங்கையின் பொருளாதார இழப்புச் சொல்லும் தரமன்று.

இந்தப் பெரும் இழப்பின் அளவுடன் ஒப்பிடுகையில் தமிழத்தில் இருந்து வரும் அறிவு சார், கலை சார், சமயம் சார் பயணிகள் சுற்றுலா நுழைவிசைவில் அங்கு வந்து உழைத்துக் கொண்டு வரும் தொகை மிகச் சொற்பமே.

இலங்கை இந்திய அரசுகளுக்குக் குருவிகளின் இந்தப் போக்குவரவு நன்கு தெரிந்தும் வாளாவிருப்பர். குருவிகளைக் கட்டுக்குள் கொண்டுவர விரும்பாத அரசுகள், அறிவு சார், கலை சார், சமயம் சார் பயணிகளைக் கட்டுக்குள் கொண்டுவர விரும்பாதது வியப்பல்ல.

ஆனாலும் இந்திய இலங்கை அர சுகளுக்குப் பெரும் தலையிடியாக இருப் பது, தீவிரவாதிகளின் வன்முறை நோக்கிய பயணங்கள். பாகிதானிய தீவிரவாதிகள் இலங்கை வந்து, இலங்கையர் ஒத்துழைப்புடன் இலங்கைக் கடவுச் சீட்டுப் பெற்று இந்தியாவுக்குள் நுழைவதே அரசுகளுக்குப் பெரும் தலைவலி.

இந்திய வானூர்தி முனையங்கள் நான்கிலும் இத்தகையோரிற் சிலர் கடந்த பத்துப் பதினைந்து ஆண்டுகளாகக் கைதாகி வருவர். பலர் கைதாகாமலே பயணித்து வருவர். பின்வரும் இணைப்பில் ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் போன்ற செய்தி படிக்க.

http://epaperbeta.timesofindia.com/Article.aspx?eid=31807&articlexml=SECURITY-BEEFED- UP-Alert-warns-of-terror-stri kes-04072014007069

தமிழரின் பண்பாட்டுத் தாயகங்கள் தமிழகமும் ஈழமுமே. வெற்றிகரமான பண்பாட்டுக் கொடுக்கல் வாங்கலே இன் றைய தமிழ்ப் பண்பாட்டின் தொட்டிலும் தொடர்ச்சியும்.

தொட்டிலாகவோ, தொடர்ச்சியாகவோ இருக்கக் கூடாது என்ற அரசியல் பார்வையே, 1948 முதலான நுழைவிசைவு நடைமுறை. 1950 முதலாகக் காரைநகரிலும் காங்கேசன்துறையிலும் கடற்படைத் தளங்கள். 1974 இன் எல்லைக்கோடு.

கள்ளத்தோணிகள், கடத்தல்காரர், போராளிகள் எனக் காலத்துக்கேற்பக் கற்பனைகள் மிதந்தாலும் இந்த மணித்துளி வரை நுழைவிசைவற்ற பயணங்களுக்குக் குறைவே இல்லை. எங்கோ ஒரு பயணி, எங்கோ ஒரு படகு, ஏதோ ஒரு பொருள், எந்த நேரமும் விதிகளைக் கடந்து கரைகளைக் கடக்கின்றன.

2009க்குப்பின் பெரிய நுழைவுகள் தமிழக மீன வருடையன. கடற்படைத் தளங்களை அகற்று என ஊர்வலமும் போராட்டமுமாக இருந்த காலம் மாறியது. தமிழக மீனவரைத் தடுக்க என்ற முழக்க ஊர்வலமும் போராட்டமும் தொடங்கின. அதற்காகக் கடற்படை வேண்டும் என்ற போராட்டமுமாய்க் கடற்படை முகாம்களை வரவேற்கும் போராட்ட களமானதே.

> **ஈழத் தமிழ்த் தேசியத்தின் எதிர் காலத்தைக் கவனத்தில் கொள்வோர் தமிழ்ப் பண்பாட்டுத் தொட்டில்களின் கொடுக்கல் வாங்கலைத் தடுக்கார். தமிழகக் கலை வரவுகளைத் தடுக்கார். தமிழகத்தைப் பகைக்கும் எந்த ஒன்றிலும் ஈடுபடார்.**

பெரும் பொருளாதார இழப்புகளாகக் கருதும் குருவிகள் தொடர்கிறார்கள். கடத்தல்கள் தொடர்கின்றன. கறுப்புப் பணப் புழக்கம் பெருகுகிறது. வங்கியற்ற நாணயமாற்றுத் (அவாலா) தொடர்கிறது. இசுலாமியத் தீவிரவாதத்தின் தளமாக, பயிற்சிக் களமாக இலங்கை தொடர்கிறது. இலங்கை மீன் வளம் வினாவிற்குரியதாகின்றது.

இவற்றைக் கேட்பாரில்லை, தடுப்பா ரில்லை, அத்தகைய அவாலா, போதைப் பொருள் கடத்தல் வரவுகளே பணங்களே இலங்கை அரசியலின் போக்கையும் தீர்மானிக்கின்றன.

இவற்றுக்கு மேலாகத் தமிழரிடை யேயான அறிவு சார், கலை சார், சமயம் சார் பயணிகள் பொருளாதார இழப்பைக் கொணர்கிறார்களா? உள்ளூர்க் கலை வளர்ப்பைக் கெடுக்கிறார்களா? தவராசா வின் கோரிக்கை பொருத்தமானதா?

இன்றைய தமிழகத்தின் முன்னணி இலக்கியப் பேச்சாளருள் ஒருவர் இலங்கையர். அடிக்கடி தமிழகம் பயணிப்பவர். அங்கு அவர் வாங்கும் கணிசமான தொகைகள் எந்தக் கணக்கில் இலங்கையுள் வருகின்றன? தமிழகப் பேச்சாளர் இவரது வருகையை ஒருபோதும் எதிர்த்ததில்லை. அவர் எத்தகைய இந்திய நுழைவிசைவு பெறுகிறார்?

துளிர்விடும் இலங்கைப் பேச்சாளர் சிலர் அண்மையில் மதுரை சென்றனரே? சுற்றுலா நுழைவிசைவில் சென்று வந்தனர். ஊதியம் பெற்று வந்தனர்.

வட்டுக்கோட்டைத் தவில் – நாகசுரக் கலைஞர்கள் அண்மையில் பெங்களூரிலும் ஐதராபாத்திலும் பாராட்டுப் பெறும் இசை நிகழ்ச்சிகளை நடத்தினரே. எத்தகைய நுழைவிசைவில் இந்தியா சென்றனர்? இந்தியக் கலைஞரோ, அரசியல்வாதிகளோ எதிர்த்தனரா? அவர்களின் ஊதியம் எவ்வகையில் இலங்கைக்குள் வந்தது?

நேற்று வரை இந்திய நுழைவிசைவின்றி ஏதிலித் தகுதி கேட்டு ஈழத் தமிழர் கடல் கடந்தனரே? எந்த இந்திய அரசியல்வாதி எதிர்த்தார்?

சுற்றுலா நுழைவிசைவில் வரும் நூற் றுக் கணக் கான தமிழக அரிவு வெட்டி எந்திர இயக்கிகள் தை, மாசி, பங்குனியில் ஈழ மடங்கும் பணிபுரியாவிடின் வயல்களில் அறுவடையாக நெல் குவிந்து அழியுமே?

குட முழுக்குகள், சமயச் சடங்குகள், சமயப் பேருரைகள் நிகழ்த்த வரும் தமிழகச் சைவ ஆன்மீகத்தார் எந்த வகை நுழைவிசைவில் வருகிறார்கள்? உழைப்பை எவ்வாறு எடுத்துச் செல்கிறார்கள்.

நற்செய்திக் கூட்டங்களை நிகழ்த்த வரும் தமிழகக்கிறித்தவப் பிரசாரகர்கள், சைவப் பண்பாட்டையே அழிக்கும் துடிப்புடன் எந்த நுழைவிசைவில் ஈழத்துள் வருகிறார்கள்? உழைப்பை எவ்வாறு எடுத்துச் செல்கிறார்கள்.

இதையெல்லாம் கேட்க, விதி மீறல்களைச் சுட்டிக்காட்ட வலிவில்லையோ?

ஈழத்து மகாலைஞர் தவில் வித்துவான் தட்சணாமூர்த்தி பற்றி அம்சன்குமார் தயாரித்த ஆவணப் படத்துக்கும் 2016இல் இந்திய தேசிய விருது கிடைத்த பொழுது எந்த நுழைவிசைவில் தயாரிப்பாளர் அங்கு சென்றார்.

திரைக்கலை மேதை பாலுமகேந்திரா, தன் வாழ்நாளில் பெரும்பகுதியைப் பயண ஆவணமின்றியே கழித்தார். இந்தியா அவரைப் போற்றவில்லையா? அகில இந்திய திரைப்படத் தேர்வுக்குழுவுக்கே தலைவராக்கி அழகு பார்த்ததே? அவர் மட்டக்களப்பாரல்லவா? அவருக்குப் பயண ஆவணம் பெறுவதில் என் முயற்சியும் தோல்வி கண்டதே?

கவிஞர் காசி ஆனந்தன் உள்ளிட்ட தோராயமாக 350,000 ஈழத் தமிழர் தமிழகத்தில் வாழவில்லையா? உழைக்கவில்லையா? வேலை வாய்ப்புப் பெறவில்லையா? தத்தம் மக்களை உயர் நிலைக்குக் கொணரவில்லையா?

எந்த வகை நுழைவிசைவில் இந்த ஏதிலிகள் தமிழகத்தில் வாழ்கிறார்கள்.

கா. பொ. இரத்தினம், கம்பவாரிதி செயராசனார், மறவன்புலவு க. சச்சிதானந்தன் ஆகியோரைத் தமிழகம் அழைத்து முதன்மை விருதுகள் வழங்கியபொழுது நுழைவிசைவு வகையை யார் அறிவார்?

ஈழத்துத் தவில் நாகசுரக் கலை வளர்ச்சிக்குத் தமிழகம் ஆற்றிய பங்களிப்பை யார் சொல்லுகிறார்கள்? தமிழ் நாட்டுச் சின்ன மேளங்கள் வராத கோயில் விழாக் காலம் ஈழத்தில் எப்பொழுது குறைந்தது? எந்த வகை நுழைவிசைவு பெற்று அவர்கள் வந்தார்கள்?

தமிழகத்து இசைவேளாளர் மரபினர் இலங்கையில் குடி அமர்ந்து வாழாத வரலாற்றுக் காலம் உண்டா? நாச்சிமார் கோயிலடியில் வாழ்ந்ததன் சொந்த பந்தங்களின் நிலையை என்னிடம் விசாரித்தறிபவர் கலைஞர் கருணாநிதி.

தமிழக ஈழ உறவுகளைக் குறைக்க, முடக்க, முறிக்க முயல்வோர் தமிழரின் அரசியல் எதிரிகளானால் எதிர்கொள்ள வழிகள் உண்டு. தமிழரே இந்த உறவுகளை உடைத்தெறிய எதிரிகளின் துணையை நாடுவதில் தவராசா முதலாமவர் அல்லர்.

1970களில் சிறீமாவோ ஆட்சிக் காலத்தில் ஒருசில தமிழ்ப் பேராசிரியர்கள், ஒரு சில தமிழ் எழுத்தாளர்கள், அரசு சார் அரசியல்வாதிகள் இந்த முயற்சியில் ஈடுபட்டனர். அக்கால யாழ் மாநகர முதல்வர், அவரின் அணுக்க அலுவலர்கள் இம் முயற்சிகளுக்குத் துணை போயினர்.

ஈழத் தமிழ்த் தேசியத்தின் எதிர்காலத்தைக் கவனத்தில் கொள்வோர் தமிழ்ப் பண்பாட்டுத் தொட்டில்களின் கொடுக்கல் வாங்கலைத் தடுக்கார். தமிழகக் கலை வரவுகளைத் தடுக்கார். தமிழகத்தைப் பகைக்கும் எந்த ஒன்றிலும் ஈடுபடார்.

இந்தக் கண்ணோட்டத்திலேயே வட மாகாண சபையினரின் அணுகுமுறைகள் அமையுமாயின் ஈழத் தமிழ்த் தேசியத்தின் வலிமையான எதிர்காலம் ஒளிமயமானதாகும்.




# கல்விக் கதிர் வெளியீடு 03

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்

பிரபல ஆசிரியர்

### பகுதி - II

13. சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

01. தரப்பட்டுள்ள தாவரங்களில் ஆணிவேர் இல்லாத தாவரம் எது?
1) அறுகு 2) தொட்டாச்சுருங்கி
3) மூக்குத்திப்பூண்டு 4) குப்பைமேனி

02. ஒரு வித்து மட்டும் காணப்படும் பழம் எது?
1) தோடை 2) மாதுளை
3) மா 4) போஞ்சி

03. அபாயம் என்பதை வெளிக்காட்டப் பயன்படுத்தப்படும் கொடியின் நிறம் யாது?
1) வெள்ளை 2) மஞ்சள்
3) சிவப்பு 4) கறுப்பு

04. வேகமாக ஓடும் பறவை எது?
1) கிவி 2) தீக்கோழி
3) பென்குயின் 4) வான்கோழி

05. சிவப்பு நிறமான வித்து எது?
1) மஞ்சாடி 2) திராட்சை
3) வெண்டி 4) பாகல்

06. வெளிச்சத்தை விரும்பும் பிராணி எது?
1) புற்றீசல் 2) கரப்பொத்தான்
3) எலி 4) நத்தை

07. மயிர்க்கொட்டிப் புழுக்களின் உணவு எது?
1) பூச்சிகள் 2) பழங்கள்
3) தானியங்கள் 4) இலைகள்

08.வலைப்பந்தாட்ட அணி ஒன்றிலுள்ள போட்டியாளர்களின் எண்ணிக்கை
1) 7 2) 6
3) 5 4) 12

09. ஊதா நிறத்தைப் பெறக்கூடிய நிறக்கலவை பின்வருவனவற்றுள் எது?
1) நீலம் + மஞ்சள் 2) பச்சை + மஞ்சள்
3) நீலம் + சிவப்பு 4) சிவப்பு + மஞ்சள்


10.

சூடாக்கப்பட்ட நீரைக்கொண்ட கேத்தல் அருகில் தரப்பட்டுள்ளது. கேத்தலின் மூக்கினூடாக வெளியேறுவது யாது?
1) புகை 2) நீர்
3) நெருப்பு 4) கொதிநீராவி

11. பூனை நாடிச் செல்லும் மருத்துவத் தாவரம் எது?
1) சீதேவியார் செங்கழுநீர் 2) குப்பைமேனி
3) சிறுபுல்லடி 4) காதுக்குடும்பி

12. நீரினால் பரவும் நோய்
1) யானைக்கால் 2) வாந்திபேதி
3) தொழுநோய் 4) டெங்குக்காய்ச்சல்

13. நுளம்பினால் பரவும் நோய் அல்லாதது
1) யானைக்கால் 2) டெங்கு
3) சிக்குன்குனியா 4) கொப்பளிப்பான்

14.

அருகே காட்டப்பட்டுள்ள விளையாட்டு எது?
1) கரப்பந்து
2) உதைபந்து
3) வலைப்பந்து
4) கூடைப்பந்து

15. தாவர இலைகள் மஞ்சள் நிறமடையக் காரணம் எது?
1) நீர் கிடைக்காமை
2) போதிய காற்று இல்லாமை
3) பசளை குறைவடைதல்
4)சூரிய வெளிச்சம் கிடைக்காமை

16. வீதியைக் கடக்கும்போது முதலில் பார்க்க வேண்டிய பக்கம் எது?
1) முன்பக்கம் 2) பின்பக்கம்
3) வலப்பக்கம் 4) இடப்பக்கம்

17. நீர் மிகக் குறைந்தளவு தேவைப்படும் தாவரம்
1) நெல் 2) பொன்னாங்காணி
3) நாகதாளி 4) தாமரை

18. கத்தரி, தக்காளி, வெண்டி போன்ற பயிர்களில் சேதம் ஏற்படுத்தும் பிராணி
1) பன்றி 2) எலி
3) பனிப்பூச்சி 4) மீலி முட்டைப்பூச்சி

19. புரதம் அதிகம் கொண்டுள்ள உணவுப் பொருள்
1) இறைச்சி 2) குரக்கன்
3) கரட் 4) கடலை

20. இலங்கையில் உள்ள வேடுவரின் பிரதான நடனம்
1) கதகளி 2) கண்டியநடனம்
3) கிரிகொரங்க 4) கோலாட்டம்

21. பின்வரும் மலர் வகைகளிலே இரவில் மலரும் மலர் எது?
1) சூரியகாந்தி 2) மல்லிகை
3) செவ்வந்தி 4) தாமரை

22. இலங்கையின் தேசிய இலச்சினையில் நெற்கதிர் குறிப்பது
1) வீரம் 2) தன்னிறைவு
3) தூய்மை 4) சௌபாக்கியம்



## தங்க இறகு!

பண்ணைபுரம் என்ற ஊரில் விவசாயி ஒருவன் இருந்தான். அவன் எவ்வளவு கடுமையாக உழைத்தாலும் அவனது வயலில் விளைச்சல் பெருகவே இல்லை. 'விவசாயி கணக்குப் பார்த்தால் உழக்குக் கூட மிஞ்சாது' என்ற பழமொழிப்படி பல ஆண்டுகளாகப் பாடுபட்டும் கூட அவன் வறுமையிலேயே வாடிக் கொண்டிருந்தான்.

வயலில் ஏர் உழுது விட்டு வரும் போது தகதகவென ஜொலித்த பறவை ஒன்று அங்கிருந்த மரத்தில் அமர்ந்திருந்தது. அதைப் பார்த்த விவசாயி, இந்தப் பறவை நம் வயலைக் காக்கும் தேவதையாக இருக்கக் கூடும். இத்தனை நாள் நாம் இதை வணங்காமல் போனதால்தான் நம்முடைய வயலில் விளைச்சல் பெருகவில்லை. இன்று முதல் இதை நாம் வணங்குவோம்' என்று தீர்மானித்தான்.

எனது வயலைக் காத்து வரும் தேவதையே! இவ்வளவு நாட்கள் உன்னைக் கவனிக்காமல் இருந்ததற்காக என்னை மன்னித்து விடு. உனக்கு என் வீட்டில் இருந்து பழங்கள் எடுத்து வந்துள்ளேன். சாப்பிட்டு என்னை ஆசீர்வதிப்பாயாக, என்று கூறி பாத்திரத்தை வைத்து விட்டுச் சென்றான் விவசாயி.

மறுநாள் காலையில் வந்து பார்த்தபோது பாத்திரத்தில் ஒரு தங்க இறகு இருந்தது. மகிழ்ச்சியுடன் அதை எடுத்துச் சென்றான் விவசாயி.

நாள்தோறும் மாலை வேளைகளில் விவசாயி பாத்திரத்தை வைத்துவிட்டு வருவான். மறுநாள் காலையில் ஒரு தங்க இறகு இருக்கும். இவ்விதம் மகிழ்ச்சியாகக் காலம் கழித்துக் கொண்டிருந்த விவசாயி ஒருநாள் வெளியூருக்குச் செல்ல வேண்டியிருந்தது. தனது மகனைக் கூப்பிட்டு அவனிடம் பறவைக்கு பழம் வைத்து விட்டு வருமாறு கூறினான்.

விவசாயி மகனும் தந்தை சொல்லியவாறே அன்று மாலை பழங்களை வைத்து விட்டுச் சென்றான்.மறுநாள் காலையில் வந்து பார்க்கும்போது அந்தப் பாத்திரத்தில் ஒரு தங்க இறகு இருந்தது. அதைப் பார்த்த விவசாயியின் மகன், இந்தப் பறவையைப் பிடித்து தங்க இறகுகளை வேண்டிய மட்டும் பிய்த்துக் கொள்வோம். எப்படியும் பறவைக்கு தங்க இறகு முளைத்துவிடும். மீண்டும் பிய்க்கலாம்,' என்று நினைத்து அவன் மறுநாள் ஒளிந்திருந்து பறவை பழம் சாப்பிடும் போது பிடித்துக் கொண்டான். அதன் இறகை பிய்க்க முயன்றபோது பறவை அவன் கண்களை குத்தி குருடாக்கி விட்டுச் சென்றது.

விவசாயியின் மகன் பேராசையின் காரணமாக பார்வையற்றவன் ஆனான். கிடைப்பதை கொண்டு திருப்தி அடைய வேண்டும். அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சுதான்.

# முதலமைச்சரைப் பதவி விலக கோருவது கேலிக்கூத்தாகும்

## வடமாகாணசபை உறுப்பினர் தியாகராஜா கூறுகிறார்



முதலமைச்சரை பதவி விலக கோருவது ஒரு கேலிக் கூத்தாகும் என்று வட மாகாண சபை உறுப்பினர் ம.தியாகராஜா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மாலை வடமாகாணசபை உறுப்பினர் ம.தியாகராஜாவின் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

டெனீஸ்வரனுக்கு வழங்கப்பட்ட தீர்ப்பின் ஊடாக மாகாணசபையினுடைய அதிகாரங்கள் தொடர்பாக அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. ஒரு முதலமைச்சர் தான் அமைத்த அமைச்சரவையையே மாற்ற முடியாது என்றால் அந்த மாகாணசபைக்கு என்ன அதிகாரம் இருக்கிறது என்பது என்பதை இந்த நேரத்தில் மக்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

இந்த வடமாகாணசபையை உருவாக்கிய பின்னர் நாங்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்நோக்கிக் கொண்டு இருக்கிறோம். இந்த தீர்ப்பானது வடமாகாணசபையின் முதலமைச்சருக்கோ, அமைச்சர்களுக்கோ, உறுப்பினர்களுக்கோ எந்த அதிகாரமும் இல்லை என்பதை வெளிப்படுத்தியிருக்கிறது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இருந்து வந்த அமைச்சர் அதனூடாகவே வந்த அமைச்சரை நீக்கியதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பிலே அங்கம் வகிக்கின்ற ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் இதற்கு எதிராக நின்று வழக்குத்தொடுத்து அந்த வழக்கை நடத்தியமை மனவருத்தத்திற்குரிய விடயமாகும்.

இதேவேளை, அரசியல் தீர்வு விடயமும் கூட ஒரு போலியானதாகவே இருக்கும் என்பது எனது கருத்து. அதற்கும் அப்பால் எமது கட்சியின் தலைவர் சுரேஸ் பிறேமச்சந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், முதலமைச்சர் உட்பட இந்த அரசமைப்பு உப்புச்சப்பு அற்ற ஒரு விடயம் என்று கூறியிருக்கிறார்கள். ஆனால், தமிழ் தேசிய கூட்டமைப்பு மாத்திரம் இதில் பல அதிகாரங்கள் இருக்கின்றன எனக் கூறிக்கொண்டு அதனை ஏற்றிருக்கின்றது.

வடமாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் முதலமைச்சரை கௌரவமாக பதவி விலக வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்.

ஆனால் இந்த எதிர்க்கட்சித்தலைவர் தான் எப்போதோ தனது பதவியில் இருந்து கௌரவமாக விலகியிருக்க வேண்டியவர். அவர் அப்படி விலகியிருப்பாராய் இருந்தால் இப்போது முதலமைச்சரை விலகச்சொல்வது நியாயமானதாக இருந்திருக்கும்.

பல சந்தர்ப்பத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இருந்து விலக வேண்டும் என்றும், விலத்த வேண்டும் என்றும் அவரது கட்சியே பல கோரிக்கைகளை எழுத்து மூலமாக விடுத்த போதிலும் அவர் அந்த பதவியிலேயே இருப்பேன் என கங்கணம் கட்டிக்கொண்டு இருந்து வரும் நிலையில் தமிழ் மக்களின் அரசியல் தலைமையாக பார்க்கப்படும் முதலமைச்சர் விக்னேஸ்வரனை பதவியில் இருந்து விலகுமாறு கூறுவது ஒரு கேலிக்கூத்தாகவே பார்க்கப்படுகின்றது என்று அவர் தெரிவித்தார்.

(கு-100)

# தேன் எடுக்க சென்றவர் காட்டு யானை தாக்கி பலி!

வாகரை கட்டுமுறிவு வனாந்தரப் பகுதியில் தேன் எடுக்கச் சென்றவர் காட்டு யானையால் தாக்கப்பட்டு அவ்விடத்திலேயே உயிரிழந்துள்ளார் என வாகரைப் பொலிஸ் பொறுப்பதிகாரி எம்.என்.ஐ. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை 5 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கட்டுமுறிவு பகுதியில் வசித்து வந்த ஒரு பிள்ளையின் தந்தை வேலன் நவரெட்ணம் (வயது 29) என்பவரே கொல்லப்பட்டுள்ளார்.

தற்போது காட்டுத் தேன் சேகரிக்கும் காலமானதால் இவர் காலை வேளையில் தேன் எடுக்கும் நோக்கத்துடன் கட்டுமுறிவுக் குளம் வனப்பகுதியை அடைந்தபோது அங்கே காட்டுயானை இவரை எதிர்கொண்டு மூர்க்கமாகத் தாக்கியுள்ளது.

சம்பவத்தில் அவர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டுள்ளார்.

பொழுது புலர்ந்ததும் காட்டு யானைக் கூட்டம் அந்த இடத்திலிருந்து நகர்ந்தவுடனேயே உதவிக்கு விரைந்தோரால் தாக்குதலுக்குள்ளானவரை நெருங்க முடிந்தது என கட்டுமுறிவு விவசாய அமைப்பின் செயலாளர் ரீ.ஜீ. குருகுலசிங்கம் தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் உடற்கூறாய்வுக்காக வாகரை பிரதேச வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் பற்றி பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

# குளவி கொட்டிய 17 தொழிலாளர்கள் மஸ்கெலியா வைத்தியசாலையில்!

தோட்டத் தொழிற்றுறையில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களை குளவிகள் கொட்டியதால் 15 பேர் மஸ்கெலியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மஸ்கெலியா பிரவுன்ஸ்விக் தோட்டத்தின் குயின்ஸ்லேன்ட் பிரிவில் தேயிலைத் தளிர்கள் கொய்யும் தொழிலில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களே, இவ்வாறு குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.



இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் 10 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 15 பேரும் பெண்கள் எனவும், இவர்களில் 12 பேர் சிகிச்சைகளின் பின் வீடு திரும்பியுள்ளனர் எனவும், 3 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் வைத்தியசாலை வட்டாரங் கள் மேலும் தெரிவித்தன.

# மலையக கல்வி அபிவிருத்திக்கு தமிழக அரசு உதவ வேண்டும்!

## கல்வி இராஜாங்க அமைச்சர்

மலையக கல்வி அபிவிருத்திக்கு தமிழ்நாடு மாநில அரசு உதவ வேண்டும் என கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கல்வி இராஜாங்க அமைச்சர் வீ. இராதாகிருஷ்ணனுக்கும் தமிழக துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வத்திற்குமிடையில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பு தமிழக துணை முதல்வரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்றுமுன் தினம் இடம்பெற்றது.

இந்த சந்திப்பின்போது தமிழ் நாடு அரசு கல்வி அமைச்சிற்கு வழங்கவுள்ள ஒரு லட்சம் புத்தகங்களுக்கு நன்றி தெரிவித்ததுடன், மலையக மக்களின் கல்வி அபிவிருத்திக்கு அதிகமான பங்களிப்பை செய்ய தமிழ்நாடு மாநில அரசு முன்வரவேண்டும் என்றும் கல்வி இராஜாங்க அமைச்சர் தமிழக துணை முதல்வரிடம் கேட்டுக்கொண்டார்.

எதிர்வரும் செப்டம்பர் மாதம் இலங்கையில் மாத்தளையில் நடைபெறவுள்ள எம்.ஜி.ஆரின் 102 ஆவது ஆண்டுவிழாவில் துணை முதல்வரை கலந்து கொள்ளுமாறும் கல்வி இராஜாங்க அமைச்சர் அழைப்புவிடுத்தார்.



இந்தச் சந்திப்பின் போது கல்வி இராஜாங்க அமைச்சருக்கு தமிழ்நாட்டின் துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தலையீடுகளின்றி காணாமற்போனோர் அலுவலகம் இலக்கை எட்டும் வரையில் தொடர்ந்து செயற்படும்!

## சாலிய பீரிஸ் தெரிவிப்பு

எவ்வித அரசியல் தலையீடுகளுமின்றி காணாமற்போனோர் அலுவலகம் தனது இலக்கை எட்டும் வரையில் தொடர்ந்து செயற்படும் என காணாமற்போனோர் அலுவலகத்தின் தவிசாளர் சாலிய பீரிஸ் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய அரசு ஆட்சிக்கு வந்தபோது வழங்கிய வாக்குறுதிகளுக்கு அமைய காணாமற்போனோர் அலுவலகம் அமைக்கப்பட்டு அதற்கு சட்ட அந்தஸ்து கொடுக்கப்பட்டுள்ளமை அலுவலகத்தின் செயற்பாடுகளுக்கு வலுச் சேர்ப்பதாகவே காணப்படுகின்றது. இந்த நிலையில், காணாமற்போனோர் அலுவலகம் தனது இலக்கினை எட்டும் வரையில் தொடர்ந்து செயற்படும். எவ்வித அரசியல் மற்றும் எந்த தரப்பினருக்கும் தாக்கங்களை ஏற்படுத்தும் வகையில் அலுவலகத்தின் செயற்பாடுகள் அமையா.

அத்துடன், எதிர்வரும் 14 ஆம் திகதி காணாமற்போனோர் அலுவலகத்தின் மக்கள் சந்திப்பு கிளிநொச்சி பிரதேசத்தில் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே பாதிக்கப்பட்ட மக்கள் அலுவலகத்தின் நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பினை வழங்கினால் விரைவில் அனைத்து கேள்விகளுக்கும் பதில் கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை தின திருமுறை மனனப்போட்டி ஜூலை 8 இல்

யாழ்ப்பாணம், ஜூலை 03

வண்ணை – சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகம், சைவச்சிறார்களின் மனனம் செய்யும் ஆற்றலையும், சைவசமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டு, சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசையை முன்னிட்டு திருமுறை மனனப் போட்டியை நடத்தவுள்ளது.

இப் போட்டி தரம் 1, 2, 3, 4 பிரிவுகளுக்கு நடத்தப்படவுள்ளது. தரம் 1, 2 பிரிவுகளுக்கு 'நத்தார்படை ஞானன்பசு', "பொன்னார் மேனி யனே" ஆகிய இரு திருமுறைகளும், தரம் 3, 4 பிரிவுகளுக்கு "பித்தா பிறை சூடி பெருமானே", "மற்றுப்பற்று எனக்கு இன்றி நின் திருப்பாதமே" ஆகிய இரு திருமுறைகளும் மனனம் செய்யப்படல் வேண்டும்.

திருமுறை மனனப் போட்டி எதிர்வரும் 8 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி நாளை 4 ஆம் திகதியாகும்.

பரிசில்கள் எதிர்வரும் 21 ஆம் திகதி சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை தினத்தன்று வழங்கப்படும்.

மேற்படி திருமுறை மனனப் போட்டியில் பங்கு பற்ற விரும்புபவர்கள் சைவசமய அபிவிருத்திக்கழக அறிவகம் இல.82 நாவலர்வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் பி.ப. 3.30 மணி முதல் 6 மணி வரை தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என சைவசமய அபிவிருத்திக்கழக சமய பிரசாரகரும், பரீட்சைச் செயலருமான சு.சிறிகாந்தன் அறிவித்துள்ளார்.

(இ)

# மெக்சிகோ ஜனாதிபதி தேர்தலில் இடதுசாரி வேட்பாளர் வெற்றி

மெக்சிகோசிட்டி,ஜூலை03

மெக்சிகோவில் நேற்று முன்தினம் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் இடதுசாரி வேட்பாளர் லோபஸ் ஆப்ரதோர் 53 சதவிகித வாக்குகள் பெற்று வரலாற்று வெற்றி பெற்றுள்ளார்.

வட அமெரிக்க நாடான மெக்சிகோவில் ஜனாதிபதி பதவி, நாடாளுமன்றம் மற்றும் 3 ஆயிரம் பிராந்திய பதவிகளுக்கு நேற்று முன்தினம் தேர்தல் நடந்தது. தற்போதைய ஜனாதிபதியாக உள்ள பெனா நெய்டோ மீது ஊழல் குற்றச்சாட்டுகள் குவிந்துள்ளமையால், அவர் சார்ந்துள்ள ஐ.ஆர்.பி. கட்சி தோல்வியை



தழுவும் எனக் கருத்து கணிப்புகள் முன்னரே வெளியாகின.

அதேபோல, வாக்கு எண்ணிக்கையில் அந்த கட்சி பின்தங்கியது. ஐ.ஆர்.பி. கட்சியில் இருந்து பிரிந்து இடதுசாரி சித்தாந்தங்கள் கொண்டதேசியரீஜெனரேசன் இயக்கம் தொடங்கிய லோபஸ் ஆப்ரதோர் இரண்டு கட்சிகளுடன் கூட்டணி அமைத்து போட்டியிட்டார். அவருக்கு வெற்றி வாய்ப்பு இருக்கின்றன என கூறப்பட்ட நிலையில், அதே போல தேர்தல் முடிவுகள் எதிரொலித்தன.

53 சதவிகித வாக்குகள் பெற்று அவர் முதலிடம் பிடித்துள்ளார். மெக்சிகோவை கடந்த ஒரு நூற்றாண்டாக ஆண்டுள்ள இரு கட்சிகளை தோற்கடித்தவர் என்ற வரலாற்று சாதனையை லோபஸ் ஆப்ரதோர் படைத்துள்ளார்.

மற்றொரு முக்கிய கட்சியான தேசிய ஆக்ஷன் கட்சியின் சார்பில் போட்டியிட்ட ரிகார்டோ அனாயா 23 சதவிகித வாக்குகளுடன் இரண்டாமிடம் பிடித்துள்ளார்.

ஊழல், வறுமை, போதை மாபியா ஆகியவற்றை ஒழிப்பதே தனது முதல் இலக்கு என லோபஸ் ஆப்ரதோர் தனது தேர்தல் வாக்குறுதியில் தெரிவித்திருந்தார். அமெரிக்காவின் குடியேற்ற கொள்கையை கடுமையாக ஆப்ரதோர் விமர்சித்து வந்தாலும், இவரது வெற்றிக்கு ட்ரம்ப் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

(க)

## பாக், பனிச்சரிவில் சிக்கிய பிரிட்டிஷ் வீரர்கள் மீட்பு!

இஸ்லாமாபாத்,ஜூலை 03

பாகிஸ்தான் நாட்டில் ஏற்பட்ட பனிச்சரிவில் சிக்கிய பிரிட்டிஷ் மலையேற்ற வீரர்கள் இருவர் உயிருடன் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

பிரிட்டிஷ் நாட்டை சேர்ந்தவர்கள் புரூஸ் நார்மண்ட் மற்றும் டிமோதி மில்லர். இருவரும் மலையேற்ற வீரர்கள். ஆஸ்திரேலிய வீரர் கிறிஸ்டியன் உபேர் என்ற வீரருடன் நேற்று முன்தினம் மலையேற்ற பயிற்சிக்காக பாகிஸ்தான் சென்றனர்.

இவர்கள் சுமார் 19,000 அடி தொலைவுள்ள ஹன்சாசுமவெளியில் உள்ள அல்டார்சர் மலையில் பயிற்சிகளை மேற்கொண்டனர்.

அப்போது ஏற்பட்ட பனிச்சரிவில் 3 பேரும் சிக்கிக் கொண்டனர். இதையடுத்து அவர்கள் தங்களை காப்பாற்றுமாறு தகவல் கொடுத்தனர்.

தகவலறிந்து பாகிஸ்தான் இராணுவத்தின்ஹெலிகொப்டர் அங்கு விரைந்து வந்தது. அவர்கள் உதவியுடன் பனிச்சரிவில் சிக்கியிருந்த பிரிட்டிஷ் வீரர்கள் இருவரும் சிறிய காயங்களுடன் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

மேலும், பனிச்சரிவில் சிக்கிய ஆஸ்திரேலிய மலையேற்ற வீரர் கிறிஸ்டியன் உபேர் உயிரிழந்திருக்கலாம் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.



## ஆப்கனில் தற்கொலைப் படை தாக்குதலில் 19 பேர் பலி!

### உயிரிழந்தவர்களில் பலர் இந்துக்களும் சீக்கியர்களும்

ஆப்கானிஸ்தானின் ஜலாலாபாத் நகரில் இடம்பெற்ற தற்கொலைப்படை தாக்குதலில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 19 ஆக அதிகரித்துள்ளது.

ஆப்கானிஸ்தான் நாட்டின் கிழக்கு பகுதியில் அமைந்துள்ள நன்கர்ஹார்மாகாணத்தின்தலைநகரான ஜலாலாபாத் என்னும் இடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் அந்த நாட்டு ஜனாதிபதி அஷ்ரப் கானி பங்கேற்றார்.

அந்த நிகழ்ச்சி நிறைவுற்று அவர் சென்றவுடன் முக்காபெரட் சதுக்கம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைப்படை தாக்குதலில் இந்துக்கள், சீக்கியர்கள் உளிட்ட 12 பேர் உயிரிழுந்தனர் என முதல் கட்ட தகவல் வெளியானது.



இந்த நிலையில், தற்போது தற்கொலைப்படை தாக்குதலில் பலியானோர் எண்ணிக்கை 19 ஆக அதிகரித்துள்ளது எனவும் 20 இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீக்கியர்கள் மற்றும் இந்துக்களை குறிவைத்து இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும். இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்க சவூதியை வலியுறுத்துகிறார் ட்ரம்ப்!

சவூதி அரேபியா எண்ணெய் உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டுமென அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் வலியுறுத்தி உள்ளார்.

ஈரானுடனான அணு ஆயுத தவிர்ப்பு ஒப்பந்தத்தில் இருந்து விலகியதையடுத்து, அந்த நாட்டின் மீதான பொருளாதார தடைகள் தொடரும் என அமெரிக்கா திட்டவட்டமாக அறிவித்தது.

மேலும், ஈரானிடம் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதிசெய்வதைநவம்பர் மாதம் 4 ஆம் திகதியுடன் நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று சர்வதேச நாடுகளுக்கு ட்ரம்ப் வலியுறுத்தி உள்ளார்.

உலக அளவில் பிரதான எண்ணெய் உற்பத்தியாளராகவிளங்கிவரும்ஈரானுக்கு இப்படி நெருக்கடி கொடுக்கப்பட்டு வரும் நிலையில், கடந்த வாரம் சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்தது.

இதன் காரணமாக வாகனங்களுக்கான எரிபொருள் விலை உயர்ந்து வருகிறது. இதனை கட்டுக்குள் கொண்டுவர, சவூதி அரேபியா எண்ணெய் உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டுமென அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் வலியுறுத்தி உள்ளார்.

இதுதொடர்பாக ட்ரம்ப், சவூதி அரேபியாவின் மன்னர் சல்மான் பின் அப்துல் அஸிஸை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியுள்ளார்.

அப்போது, அவர் சர்வதேச எண்ணெய் சந்தையில் நிலைத்தன்மையை பாதுகாக்க வேண்டும் என ட்ரம்ப் வலியுறுத்தினார். அதற்கு சவூதி அரேபியா, நாள் ஒன்றுக்கு 20 லட்சம் பீப்பாய்கள் வரை எண்ணெய் உற்பத்தி செய்ய வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

இந்த தகவலை ட்ரம்ப் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.



## ஆப்கனில் சீக்கியர் மீது நடத்திய தாக்குதல் கோழைத்தனமானது

### இந்தியா கண்டனம்

ஆப்கானிஸ்தானின் ஜலாலாபாத் நகரில் சீக்கியர்கள் மீது நடத்திய தற்கொலைப்படை தாக்குதல் கொடூரமானது மற்றும் கோழைத்தனமானது என இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தான் கிழக்கு பகுதியில் உள்ள நன்கர்ஹர் மாகாணத்தின் தலைநகரான ஜலாலாபாத் என்னும் இடத்தில் இடம்பெற்ற தாக்குதலில் இந்துக்கள், சீக்கியர்கள் உட்பட மொத்தம் 19 பேர் உயிரிழந்தனர்.

சீக்கியர்கள் மற்றும் இந்துக்களை குறிவைத்து இந்த தாக்குதல் நடைபெற்றுள்ளது. இந்த தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், ஆப்கானிஸ்தான் நாட்டில் சீக்கியர்கள் மீது நடத்திய தற்கொலைப்படை தாக்குதல் கொடூரமானது மற்றும் கோழைத்தனமானது என காபூலில் உள்ள இந்திய தூதரகம் தனது கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில்–

ஜலாலாபாத் நகரில் சீக்கியர்கள் மற்றும் இந்துக்கள் மீது நடத்தப்பட்ட தற்கொலைப்படை தாக்குதலுக்கு கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்தத் தாக்குதல் கொடூரமானது மற்றும் கோழைத்தனமானது.

இந்தத் தாக்குதலில் பலியானவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம் என குறிப்பிட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் சீக்கியர்களை குறிவைத்து நடைபெற்றதற்கொலைப் படை தாக்குதலுக்கு பஞ்சாப் முதலமைச்சர் அமரிந்தர் சிங்கண்டனம் தெரிவித்திருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(க)

# காவிரி ஆணையத்தின் முதல் கூட்டம்; 4 மாநிலப் பிரதிநிதிகளும் பங்கேற்பு

புதுடில்லி,ஜூலை 03

டில்லியில் நேற்று காவிரி மேலாண்மை ஆணையத்தின் முதல் கூட்டம், தலைவர் மசூத் உசேன் தலைமையில் தொடங்கியது. இதில், 4 மாநில பிரதிநிதிகளும் பங்கேற்றனர்.

பல ஆண்டுகளாக நீடித்து வரும் காவிரி விவகாரத்தில் இப்போது சற்று முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. தமிழக அரசு மேற்கொண்ட தீவிர சட்டப் போராட்டத்தின் காரணமாக உச்ச நீதிமன்ற உத்தரவின் பேரில், சம்பந்தப்பட்ட மாநிலங்கள் காவிரி நீரை பகிர்ந்துகொள்வதற்காக காவிரி மேலாண்மை ஆணையத்தையும், ஒழுங்காற்று குழுவையும் மத்திய அரசு அமைத்தது.



இந்த இரு அமைப்புகளுக்கும் தமிழகம், கர்நாடகம், கேரளா, புதுச்சேரி ஆகிய 4 மாநிலங்களும் தங்கள் பிரதிநிதிகளை நியமித்து உள்ளன.

காவிரி மேலாண்மை ஆணையத்துக்கு கர்நாடகம் தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்து வரும் நிலையில், காவிரி மேலாண்மை ஆணையத்தின் முதல் கூட்டம், அதன் தலைவரான மத்திய நீர்வள ஆணைய தலைவர் மசூத் உசேன் தலைமையில் டில்லியில் நேற்று இடம்பெற்றது.

மத்திய நீர்வளத்துறை அமைச்சக அலுவலகத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் காவிரி மேலாண்மை ஆணையத்தில் தமிழக அரசின் சார்பில் உறுப்பினராக இடம் பெற்றுள்ள தமிழக பொதுப்பணித்துறை முதன்மைச் செயலாளர் எஸ்.கே.பிரபாகரன் பங்கேற்று தமிழக அரசின் கருத்துக்களை முன் வைத்து, நீர் திறப்பு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளையும் முன்வைத்தார். இதேபோல் புதுச்சேரி, கேரளா மற்றும் கர்நாடக மாநில பிரதிநிதிகளும் பங்கேற்று தங்கள் தரப்பு கருத்துக்களை முன்வைத்தனர்.

இந்த கூட்டத்தில் காவிரி நதி நீர் பங்கீடு தொடர்பான அனைத்து விடயங்கள் குறித்தும் விவாதிக்கப்படுகிறது. குறிப்பாக, ஆணையத்தின் விதிகள், செயல்பாட்டு முறைகள், கூட்டங்களுக்கான நடைமுறைகள் போன்றவை பற்றி ஆலோசிக்கப்பட்டுள்ளது.

(கு)

## நான்கு நாள்கள் உத்தியோகபூர்வ விஜயமாக இந்தியா செல்கிறார் தென்கொரிய ஜனாதிபதி



புதுடில்லி,ஜூலை 03

தென்கொரிய ஜனாதிபதி மூன் ஜே 4 நாள் உத்தியோக பூர்வ விஜயமாக இந்தியா செல்லவுள்ளார் என அந்த நாட்டு ஜனாதிபதி மாளிகை வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்கொரிய ஜனாதிபதி மூன் ஜே எதிர் வரும் 8 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். இந்தப் பயணத்தின் போது அவர் இந்திய பிரதமர் மோடியை சந்திக்க உள்ளார்.

இதுதொடர்பாக தென்கொரிய ஜனாதிபதி மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்திய பிரதமர் மோடியின் அழைப்பை ஏற்று ஜனாதிபதி மூன் ஜே இந்தியா செல்லவுள்ளார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

## சுவிஸ் வங்கியில் பணம் பதுக்கியவர்கள் பட்டியலில் இந்தியா 73 ஆவது இடத்தில்

சுவிஸ் வங்கியில் பணம் பதுக்கியவர்கள் பட்டியலில் இந்தியா 73ஆவது இடத்தில் உள்ளது.

இந்தியர்கள் உட்பட சர்வதேச நாடுகளை சேர்ந்தவர்கள் தங்களின் கறுப்பு பணத்தை சுவிற்சர்லாந்து நாட்டு வங்கிகளில் பதுக்குகிறார்கள். இந்தியாவில் பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசு கறுப்பு பண பதுக்கலுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுத்துவருகிறது.

எனினும், அதனை மீறியும் கடந்த ஆண்டு, சுவிஸ் வங்கிகளில் இந்தியர்களின் கருப்பு பண பதுக்கல் 50 சதவீதம் உயர்ந்து 1.01 பில்லியன் சுவிஸ் பிராங்க் (சுமார் 7 ஆயிரம் கோடி இந்திய ரூபா) ஆகி உள்ளது என்ற அதிர்ச்சி தகவல் சமீபத்தில் வெளியானது.

இதன் மூலம் சுவிஸ் வங்கிகளில் பணம் பதுக்கியவர்களின் பட்டியலில் இந்தியா 73 ஆவது இடத்தில் உள்ளதாக தற்போது தகவல் கிடைத்துள்ளது. சுவிற்சர்லாந்தின் மத்திய வங்கி வெளியிட்டுள்ள வருடாந்திர ஆய்வறிக்கையின் மூலம் இது தெரியவந்துள்ளது.

இந்த பட்டியலில் இங்கிலாந்து தொடர்ந்து முதல் இடத்தில் உள்ளது. அதனை தொடர்ந்து அமெரிக்கா 2 ஆவது இடத்தில் இருக்கிறது. அதன் தொடர்ச்சியாக மேற்கு இந்திய தீவு, பிரான்ஸ், ஹாங்கொங், பஹாமாஸ், ஜேர்மனி, குருன்செவ், லக்சம்பர்க், கேமன் தீவுகள் ஆகிய நாடுகள் முதல் 10 இடங்களில் உள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### தூத்துக்குடி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம்:

## பொதுமக்கள் மீது போடப்பட்ட வழக்குகளை வாபஸ் பெற வேண்டும் என்கிறார் வைகோ!

சென்னை,ஜூலை 03

தூத்துக்குடி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக பொது மக்கள் மீது போடப்பட்ட வழக்குகளை உடனே வாபஸ் பெற வேண்டும் என்று வைகோ வலியுறுத்தியுள்ளார்.



இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட நடவடிக்கை எடுக்காத அப்போதைய இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி கடந்த 2009 ஆம் ஆண்டு தூத்துக்குடிக்கு வந்தார். அப்போது ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ கறுப்புக் கொடி காட்டி எதிர்ப்புத் தெரிவிக்க முயன்றார்.

இது தொடர்பாக பொலிஸார் வழக்குப்பதிவு செய்து வைகோ உட்பட 159 பேரைக் கைது செய்தனர்.

இது தொடர்பான வழக்கு தூத்துக்குடி 2 ஆவது ஜுடிசியல் மாஜிஸ்திரேட் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ ஆஜரானார். அவருடன் வழக்கில் தொடர்புடையவர்களும் ஆஜரானார்கள்.

முன்னதாக நீதிமன்ற வளாகத்தில் வைகோ ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தவை வருமாறு:-

தூத்துக்குடியில் துப்பாக்கிசூடு நடந்த அன்றே பாதிக்கப்பட்ட மக்களை நான் சென்று பார்த்தேன். ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக முன்பு நாங்கள் போராடிய போது எங்களை கைது செய்து பாதுகாப்பாக மறுநாள் விடுவித்தனர். ஆனால் இப்போது துப்பாக்கிச் சூடு நடத்தி 13 பேரை கொன்றுள்ளார்கள்.

கலவரம் தொடர்பாக கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்க வேண்டும். பொதுமக்கள் மீது போடப்பட்ட வழக்குகளை உடனே வாபஸ் பெற வேண்டும். இந்த விவகாரத்தில் துப்பாக்கிச் சூடு நடத்திய பொலிஸார் மீது ஏன் வழக்குப்பதிவு செய்யவில்லை என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

## கமல்ஹாசனுக்கு விஜய் நன்றி




சென்னை,ஜூலை 03

விஜய்யை அரசியல் களத்திற்கு அழைக்கிறேன் என டுவிட்டரில் கூறிய கமல்ஹாசனுக்கு நடிகர் விஜய் நன்றி தெரிவித்துள்ளார் என தகவல் வெளியாகி இருக்கிறது.

மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவர் கமல்ஹாசன் கடந்த சில நாட்களாக டுவிட்டர் மூலம் பொது மக்களின் கேள்விகளுக்கு பதில் அளித்து வருகிறார்.

விஜய் அரசியலுக்கு வந்தால் வரவேற்பீர்களா?' என்கிற கேள்விக்கு பதில் அளித்த கமல் 'எனது அனைத்துத்தம்பிகளையும் வரவேற்கிறேன், அதுவும் இவர் எனக்கு மிகவும் பிடித்தமான தம்பி, எனக்கு மட்டுமல்ல, அனைவருக்குமே பிடித்த தம்பி, கண்டிப்பாக வரவேற்கிறேன்' என்று கூறினார்.

இது அரசியல் அரங்கில் பரபரப்பான பேச்சாகி இருக்கிறது. இதனை தொடர்ந்து கமல்ஹாசனை செல்போனில் விஜய் தொடர்பு கொண்டு நன்றி தெரிவித்துள்ளார் எனத் தகவல் வெளியாகி இருக்கிறது.

செல்போன் குறுந்தகவல் மூலமாகவும் கமலுக்கு நன்றி தெரிவித்துள்ள விஜய் 'தங்கள் அன்புக்கும் ஆதரவுக்கும் நன்றி' என்று குறிப்பிட்டுள்ளாராம்.

கமல், ரஜனிக்கு அடுத்தபடியாக அரசியலில் விஜய் களமிறங்குவார் என ஒரு யூகம் கிளம்பியுள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்பே அரசியல் வருகைக்கு அடித்தளம் போட்டார் விஜய். ஆனால் சில அரசியல் நிர்ப்பந்தங்களால் அவர் நடிக்கும் படங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டமையைத் தொடர்ந்து அந்த முடிவை தள்ளிவைத்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## நடுத்தெருவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'ஜனாதிபதியின் மக்கள் சேவை' தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் எட்டாவது நிகழ்வு யாழ்ப்பாண மாவட்டத்தில் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன, வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன ஆகியோர் கலந்துகொண்டனர்.

அவர்கள் முன்னிலையிலேயே மாவை காட்டமாக இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

வடக்கு – கிழக்கு மக்கள் புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதில் கூடிய பங்களிப்பை வழங்கியிருந்தார்கள். ஆனால் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதனை மறந்து செயற்படுகின்றார்.

இதேபோன்றே தற்போதைய கூட்டு அரசு எமது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறி வருகின்றது. எங்கள் மக்களின் ஆதங்கம் என்னவென்றால் ஜனாதிபதி – பிரதமர் ஒன்றாக வேலை செய்ய வேண்டும் என்பதே. அதற்காகத்தான் நாங்கள் வாக்களித்தோம், இரு தரப்பும் பிரிந்து நிற்கவேண்டாம் என்றே கோரிக்கை விடுத்து வருகின்றோம்.

முப்பது வருடகால யுத்தத்தால் அழிவடைந்த எங்கள் தேசத்தை மீளக் கட்டியெழுப்பத்தான் நாங்கள் வேலை செய்து வருகின்றோம். அமைச்சுப் பொறுப்பை பெற்றுக் கொள்வதற்காக நாங்கள் அரசோடு இணைந்து வேலை செய்யவில்லை. சாதாரண மக்களின் தேவைகளையாவது நிறைவேற்ற இந்த அரசு முன்வர வேண்டும்.

வடக்கு – கிழக்கு மக்களுக்கு மீள்குடியேற்ற நிதி போதியளவு வழங்கப்படவில்லை. காணிகள் முழுமையாக விடுவிக்கப்படவில்லை. தற்போதும் எங்கள் மக்கள் முகாம்களில் வாழ்ந்து வருகின்றார்கள்.

அரசுக்கு ஆதரவு வழங்கினோம். அரசோடு சேர்ந்து வேலை செய்தோம். ஆனால் தற்போது ஏமாற்றப்பட்டுள்ளோம். 3 ஆண்டுகளில் இந்த அரசு ஒன்றுமே பெரிதாகச் செய்யவில்லை. சில நிகழ்வுகள் எமக்கு ஆறுதல் தந்தாலும் திருப்தியளிக்கவில்லை.

போராளிகளாக இருந்த எமது இளைஞர்கள் தற்போது ஜனநாயக நீரோட்டத்துக்குள் இணைந்துள்ளார்கள். அவர்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்படவேண்டும். கணவனை இழந்த பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும். தென்னிலங்கையில் இருந்து வடக்குக்கு அரச வேலைகளுக்காக நியமிக்கப்பட்டவர்கள் மீள அழைக்கப்படவேண்டும். எங்கள் பட்டதாரிகள், சிற்றூழியர்கள் வேலைக்காகப் போராடிக் கொண்டிருக்கும் நிலையில், தென் பகுதியில் உள்ளவர்களை எதற்காக இங்கு வேலைக்கு அமர்த்தவேண்டும்?

ஜனாதிபதியை மகிழ்ச்சியோடு தெரிவு செய்தோம். ஆனால் தற்போது துன்பப்படுகின்றோம். கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை உள்வாங்காமல் மீள்குடியேற்றச் செயலணியை உருவாக்கியிருக்கின்றார்கள். இவ்வாறு ஒவ்வொரு இடங்களிலும் மக்கள் பிரதிநிதிகளான எம்மை இந்த அரசு புறம் தள்ளுகிறது. இவ்வாறு தான் நாங்கள் தெரிவு செய்த அரசு எம்மை ஏமாற்றுகின்றது.

ஒவ்வொரு நாளும் இங்கு சட்டவிரோதச் சம்பவங்கள் நடைபெறுகின்றன. ஆனால் அதனைக் கட்டுப்படுத்தவேண்டிய பொலிஸ் தரப்பு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றது. ஆகவே அனைத்து விடயங்களையும் இந்த அரசு ஒற்றுமையாக இருந்து எமக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். அடுத்த அமைச்சரவைக்கு முன்னர் ஜனாதிபதி, பிரதமர் ஒற்றுமையாக எங்கள் மக்களுக்கு வேண்டியவற்றைச் செய்யவேண்டும். – என்றார். (ஐ-7)

## முதலமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர் –

முதலமைச்சர் வேட்பாளர் மாவை சேனாதிராசா என்று நான் கூறவில்லை. ஊடகங்களில் பல பத்தி எழுத்தாளர்கள் அப்படியாகப் புனைந்து எழுதினார்கள். சில பத்தி எழுத்தாளர்கள், முதலமைச்சர் வேட்பாளர் விக்னேஸ்வரன் இல்லை என்றும், மாவை சேனாதிராசாவே என்றும் நான் அடையாளம் காட்டினேன் என எழுதினார்கள். ஆனால் அப்படி நான் ஏதும் செய்யவில்லை. நான் சொன்னது மாவை சேனாதிராசா இரண்டு வருடங்களுக்குப் பின்னர் பொறுப்பெடுக்கவேண்டுமென்று விக்னேஸ்வரன் கூறியிருந்தார் என்பதைத்தான். அடுத்த முதலமைச்சர் வேட்பாளர் யார் என்பதும் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என்று நான் அதே ஊடக சந்திப்பில் கூறியிருந்தேன். – என்றார். (ஐ-7)

## அமைச்சராகவே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை. அவர் தொடர்ந்தும் அமைச்சராகவே இருக்கிறார். அவர் இன்னமும் அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்படவில்லை என்று தான் சொல்லியுள்ளது. ஆகவே அமைச்சராக அவர் இயங்குவதை எவரும் தடுக்கக்கூடாது என்று இடைக்கால உத்தரவு கொடுக்கப்பட்டுள்ளது.

–இவ்வாறு தெரிவித்தார் கூட்டமைப்பின் பேச்சாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன்.

நேற்று யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடக மாநாட்டில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய உத்தரவு சட்டப்படி சரியான உத்தரவு. டெனிஸ்வரன் சட்டப்படி அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்படவில்லை. அந்த நீதிமன்ற உத்தரவில் மாகாண சபை முறைமையில் முதலமைச்சருக்கு அதிகாரம் இருக்கிறதா அல்லது ஆளுநருக்கு அதிகாரம் இருக்கிறதா என்ற கேள்வி எழுந்திருப்பதாக பலர் விமர்சனம் செய்கிறார்கள். அது தவறானதொரு விமர்சனம். அமைச்சர்களுக்குப் பதவி வழங்கவும், பதவி நீக்கவும் முதலமைச்சருக்குத்தான் அதிகாரம் இருக்கிறது.

இந்த நீதிமன்ற உத்தரவில் ஆளுநருக்கு அதிகாரம் உள்ளதாகச் சொல்லவில்லை. அது முதலமைச்சரிடம்தான் உள்ளது. அதை எப்படி உபயோகிப்பதென்பதற்கு ஒரு முறை இருக்கிறது. அந்த முறை தெரிந்திருந்தால் அந்த முறையின்படி அதைச் செய்திருக்கலாம். தெரியாத்தன்மையால் விட்ட பிழையோ என்னவோ தெரியவில்லை. சட்டத்தில் அது உள்ளது. படித்துப் பார்த்தால் தெரிந்திருக்கும் – என்றார். (ஐ-7)

## புலிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்வொன்றில் பகிரங்கமாகக் கருத்து வெளியிட்டார் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன்.

நாங்கள் உயிருடன் வாழ வேண்டுமானால் – நாங்கள் நிம்மதியுடன் வீதிகளில் நடக்க வேண்டுமானால் – எங்கள் பிள்ளைகள் பாடசாலை சென்று மீண்டும் வீடு திரும்பவேண்டுமானால், வடக்கு – கிழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கை ஓங்கவேண்டும் என்று திருமதி விஜயகலா குறிப்பிட்டார்.

மத்திய அமைச்சர்கள் பங்கேற்ற நிகழ்வில் வைத்தே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

'ஜனாதிபதியின் மக்கள் சேவை' தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் எட்டாவது நிகழ்வு யாழ்ப்பாண மாவட்டத்தில் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன, வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன ஆகியோர் கலந்துகொண்டனர். அவர்கள் முன்னிலையிலேயே இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

அவரின் இந்தக் கருத்துக்களைக்கேட்ட, மண்டபத்திலிருந்த கிராம அலுவலர்கள், அதிகாரிகள் என அனைவரும் கைதட்டி மகிழ்ச்சி தெரிவித்தனர்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

எமது மாவட்டத்தில் இத்தகையதொரு மக்கள் பணியை ஆரம்பித்து வைப்பதை வரவேற்பதுடன் எமது மக்கள் சார்பில் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன். தற்போது குடாநாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமைகளைப் பார்க்கின்றபோது மிக மனவருத்தம் ஏற்படுகின்றது. அதனைத் தெற்கிலிருந்து வந்திருக்கும் எமது அமைச்சர்களுக்கும் தெரியப்படுத்துகின்றேன்.

ஆறு வயதுச் சிறுமி கொலை செய்யப்பட்டிருக்கிறாள். இவ்வாறான மனவருத்தத்தை ஏற்படுத்தக்கூடிய நிலைமைகள் இருக்கின்றபோது எமது மாவட்டத்துக்கு எதற்காக இந்த உத்தியோகபூர்வப் பணிகள்?.

இதற்காகவா நாங்கள் மைத்திரிபாலவை ஜனாதிபதியாக்கினோம். நாங்கள் தலையால் நடந்து ஜனாதியாக்கிய அவர் இன்று எமக்காக என்ன செய்கின்றார்? அவர் தனது கட்சியை வளர்க்கிறார். எங்கள் மக்களைக் காப்பாற்றுகிறாரில்லை.

நாங்கள் 2009 மே 18 இற்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் காலத்தில் எப்படி வாழ்ந்தோம் என்பதை உணர்வுபூர்வமாக உணருகின்றோம். இன்று நாங்கள் இருக்கக் கூடிய நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளை உருவாக்க வேண்டுமென்பதே எங்களது முக்கிய நோக்கம்.

கடந்த மூன்று வருடத்தில் எமக்கு அபிவிருத்திகளை, வேலை வாய்ப்புக்களை வழங்கினார்கள். காணிகளை விடுவித்துத் தந்திருக்கிறார்கள். அதற்கு நாங்கள் அரசுக்கு நன்றிகளைக் கூறுகிறோம். ஆனால் அதற்கு அப்பால் எதுவுமே இந்த அரசு செய்யவில்லை. எங்களுக்கு எல்லாம் செய்தாகச் சொல்வது அப்பட்டமான பொய். நாங்களும் அந்த அரசில் அமைச்சர்களாகத்தான் இருக்கின்றோம். ஆனாலும் எங்கள் தலைமைத்துவத்துக்கு எதிராக நாங்கள் பேசவும் முடியாது. எங்களுக்கொரு கட்டுக்கோப்பு இருக்கின்றது. ஆனால் அதனை மீறவேண்டிய சந்தர்ப்பங்களும் ஏற்பட்டிருக்கின்றன.

எமது இளைஞர், யுவதிகள் வேலை வாய்ப்புக்களைத் வீதிகளில் தடுமாறுகின்றார்கள். அந்த வேலைவாய்ப்பு இல்லாத காரணத்தால்தான் மது போதைக்கு இளைஞர்கள் ஆளாகின்றார்கள். உண்மையில் இந்த போதை வஸ்துகளைக் கொண்டு வந்தவர்கள் யார்? 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்த பின்னர் அரசியல் வாதிகளின் வாகனங்களிலே போதைவஸ்துகளை வடக்கு – கிழக்குக்கு கடந்த அரசே அனுப்பியிருக்கின்றது. போதைவஸ்தின் ஆதிக்கம் வடக்கிலே குறிப்பாக யாழ்ப்பாணத்திலே தலை தூக்கியிருக்கின்றது.

எங்கள் இளைஞர், யுவதிகளை முடக்குவதற்காகவே இந்த போதைவஸ்துக்கள் கொண்டு வரப்பட்டன. யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த அரசு பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்கு வாழ்வாதாரத்தை ஏற்படுத்திக் கொடுத்ததா அல்லது படித்த இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பைக் கொடுத்ததா என்று பார்த்தால் ஒன்றுமே செய்யப்படவில்லை.

உள்ளூராட்சி அமைச்சு வெளியிட்ட அறிக்கையில், யாழ். மாவட்டத்தில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்களைத் தலைமைத்துவமாகக்கொண்ட குடும்பங்கள் உள்ளன எனக் கூறப்பட்டுள்ளது. இவர்களுக்கு அரசு என்ன கொடுத்திருக்கின்றது? யுத்தத்துக்கு முன்னர் இவ்வாறு இருந்ததில்லை. யாரிடமும் கையேந்திய வரலாறுகளும் இல்லை. நாங்கள் எங்களுடைய கைகளை நம்பியே வாழ்ந்து கொண்டிருந்தோம்.

புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட 12 ஆயிரம் முன்னாள் போராளிகளுக்கு ஜனாதிபதி என்ன செய்திருக்கின்றார் என்று பாருங்கள். இந்த அரசால் வழங்கப்படும் நிதியையும் அவர் நிராகரித்தே இருக்கின்றார். இவர் தெற்கிலே வெல்வதற்காக – அங்குள்ள வாக்குகளைப் பெறுவதற்காக– முன்னாள் போராளிகளுக்காக அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட நிதிக் கோரிக்கையை நிராகரித்திருக்கிறார். ஆயுதத்தை ஏந்தினார்கள் என்பதால் அவர்கள் மனிதர்கள் இல்லை என்றா நீங்கள் நிராகரிக்கின்றீர்கள்?

ஒற்றுமைக்காகவும் தீர்வுக்காகவும் நாங்கள் தலையால் நடந்து ஜனாதிபதியாக்கிய பின்னர் அவர் என்ன செய்திருக்கின்றார்? தனக்கு எதிராக வேலை செய்த நாடாளுமன்ற உறுப்பினரை இங்கு அமைச்சராக்கியிருக்கிறார். அதைத் தான் வடக்கு மக்களுக்கு ஜனாதிபதி செய்திருக்கின்றார். சொல்லவே வெட்கமாக இருக்கின்றது.

எங்களிடம் இளைஞர், யுவதிகள் வேலை வாய்ப்புக்களைக் கோருகின்றபோது அதற்குப் பதில் சொல்ல முடியாமல் நாங்கள் தடுமாறுகின்றோம். இந்நிலையில் தெற்கிலிருந்து இளைஞர், யுவதிகள் வேலைகளைப் பெற்று இங்கு வருகின்றார்கள். இவ்வாறு தெற்கிலிருப்பவர்களுக்கு இங்கு தாரை வார்த்துக் கொடுக்கும் செயற்பாடுகளே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால் பட்டப்படிப்பை முடித்த எமது இளைஞர், யுவதிகள் சந்தைகளில் மரக்கறி விற்பதும் கல் மண் சுமப்பதும் வீதிகளில் போராட்டங்களை நடத்துவதுமாக இருக்கின்றமையை நாங்கள் காணக்கூடியதாக இருக்கின்றது.

கடந்த கால அரசு தெற்கிலிருந்து வடக்குக்கு வேலை வாய்ப்புக்காகக் பலரைக் கொண்டு வந்தது. அதனை இன்னும் இந்த அரசில் உள்ள அமைச்சர்கள் கடைப்பிடித்து வருகின்றார்கள். அத்தகைய செயற்பாடுகள் எங்கள் மனதை வேதனைப்படுத்துகின்றன.

எங்களுக்கு விகிதாசாரத்தில் வேலை வாய்ப்பு வழங்கவேண்டும். அது மட்டுமல்லாமல் முன்னுரிமை அடிப்படையில் வடக்கு – கிழக்கில் விசேட திட்டங்களைக் கொண்டு வரவேண்டும். வடக்கு – கிழக்கை தவிர்ந்த வேறு பிரதேசங்கள் யுத்தத்தால் பாதிக்கப்படவில்லை – என்றார். (ஐ-7)

## ஜெஜினா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்படவுள்ளது. அத்தோடு, கடையடைப்புக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பேரணி மன்னார், முருங்கன் பஸ் தரிப்பிடத்தில் இன்று காலை 9 மணியளவில் ஆரம்பமாகவுள்ளது.

மன்னார் சமூக மட்ட அமைப்புக்கள் மற்றும் பொது அமைப்புக்கள், இந்த அமைதிப் பேரணிக்கு அழைப்பு விடுத்துள்ளன. இதன்போது மன்னார் மாவட்டம் முழுவதும் கடையடைப்பை மேற்கொள்ளவும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சுழிபுரம் பகுதியில் 6 வயதுப் பாடசாலை மாணவி றெஜினா கடத்தப்பட்டு கடந்த 25ஆம் திகதி கழுத்து நெரிக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்.

மாணவியின் படுகொலைக்கு நீதிகோரி வடக்கு – கிழக்கில் தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கூட்டமைப்புடன் சந்தித்துப் பேசவேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த கடந்த நாடாளுமன்றக் கூட்டத்தின் போது என்னிடம் கேட்டிருந்தார். ஆனால் இன்னமும் அந்தச் சந்திப்பு ஒழுங்கு செய்யப்படவில்லை. அவரது குழுவோடு கூட்டமைப்பின் குழு புதிய அரசமைப்பு உருவாக்கம் குறித்து பேச்சு நடத்தவேண்டுமென அவர் விருப்பம் தெரிவித்திருந்தார், எதிர்வரும் வாரம் நாடாளுமன்றம் கூடும்போது நாங்கள் அதற்கான திகதியொன்றை ஒழுங்கு செய்யலாம் என்று நினைக்கின்றேன் – என்றார்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் மாற்றம் வருமா என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த சுமந்திரன்,–

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவி மூன்றாவது பெரும்பான்மைஆசனங்களைக் கொண்ட கட்சிக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏனென்றால் முதல் இரண்டு கட்சிகளும் அரசில் பங்குதாரர்களாக உள்ளன. அது மஹிந்தவுக்கு அந்தப் பதவியைக் கொடுக்கவேண்டுமென என்ன அடிப்படையில் சொல்லுகிறார்கள் என்று எனக்கு விளங்கவில்லை. நாடாளுமன்றச் சம்பிரதாயத்தின்படி கூடுதலான ஆசனங்களைக்கொண்ட இரண்டு கட்சிகள் தேசிய அரசில் இணைந்திருக்கின்றபோது அந்தக் கட்சிகளின் உறுப்பினர் ஒருவருக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி கொடுக்க முடியாது. ஆனபடியால் தான் மூன்றாவது பெரும்பான்மையை உள்ள கூட்டமைப்புக்கு அந்தப் பதவி வழங்கப்பட்டிருக்கின்றது – என்றார். (ஐ-7)



# நடையைக் கட்டியது ஸ்பெய்ன் காலிறுதிக்குள் நுழைந்தது ரஷ்யா

மேலதிக நேர ஆட்ட நிறைவின் போதும் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்த முன்னோடிக் காலிறுதிப் போட்டியில் சமநிலை உடைப்பு உதைகளில் இரண்டை கோல் காப்பாளர் இகோர் அக்கின்வீவ் தடுத்து நிறுத்தியதன் பலனாக முன்னாள் சம்பியன் ஸ்பெய்னை 4:3 என்ற பெனல்டி அடிப்படையில் வெற்றிகொண்ட வரவேற்பு நாடான ரஷ்யா, உலகக் கிண்ணக் காலிறுதியில் விளையாட தகுதிபெற்றது.

இந்தத் தோல்வியினால் உலகக் கிண்ணப்போட்டியிலிருந்துஸ்பெய்ன் வெளியேற்றப்பட்டது. ஜேர்மனி, ஆர்ஜென்ரீனாவைத் தொடர்ந்து



வெளியேற்றப்பட்ட மூன்றாவது முன்னாள் உலக சம்பியன் ஸ்பெய்ன் ஆகும்.

மொஸ்கோ, லுசிக்கி விளையாட்டரங்கில் ரஷ்யாவுக்கும் ஸ்பெய்னுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் ஞாயிறு இரவு நடைபெற்ற போட்டி 90நிமிடநிறைவின்போதும்அதனைத் தொடர்ந்து வழங்கப்பட்ட 30 நிமிட மேலதிக நேர நிறைவின்போதும் 1:1 என்றகோல் அடிப்படையில் சமநிலையில் இருந்தது. இதனை அடுத்து வழங்கப்பட்ட பெனால்டி முறையில் ரஷ்யாவுக்கே அதிர்ஷ்டம் கிடைத்தது.

இப்போட்டியில் கோல் போடுவதற்கு பெரும் சிரமப்பட்ட ஸ்பெய்னுக்கு 12ஆவது நிமிடத்தில் இலவச கோல்



ஒன்று ரஷ்ய வீரரால் போட்டுக் கொடுக்கப்பட்டது. ஸ்பெய்ன் அணித் தலைவர் சேர்ஜியோ ரமோஸை தடுப்பதற்கான கடும் முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த ரஷ்ய வீரர் சேர்ஜி இஞ்ஞாஷெவிச், உள்நோக்கி வந்த பந்துக்கு புறமுதுகு காட்டியபோது பந்து அவரது பாதணியில் பட்டு அவரது சொந்த கோலினுள்ளேயே சென்றது.

போட்டியின் 39ஆவது நிமிடத்தில் ரஷ்யா கோல்போடுவதை தடுக்கும் வகையில் தனது பெனல்டி எல்லையில் உயரே தாவிய ஜெரார்ட் பிக்கே பந்தை இடது கையால் தட்டியதால் மத்தியஸ்தர் எவ்வித கேள்விக்கும் இடமின்றி ரஷ்யாவுக்கு பெனால்டி ஒன்றை வழங்கினார். அத்துடன் பிக்கேவுக்கு மஞ்சள் அட்டையையும் காட்டினார்.

இந்தப் பெனால்டியை 41ஆவது நிமிடத்தில் ஆர்ட்டெம் ட்ஸியுபா இலக்கு தவறாமல் உதைத்து ரஷ்யா சார்பாக கோல் நிலையைச் சமப்படுத்தினார்.

அதன் பின்னர் வெற்றி கோலைப் போடுவதற்காக 2 அணிகளும் முயற்சித்தன. ஸ்பெய்ன் அணிக்கு கிடைத்த எல்லா வாய்ப்புகளுமே பயனற்றுப் போயின. ரஷ்ய கோல்காப்பாளர் அக்கின்பீவ் பலசந்தர்ப்பங்களில் எதிரணியின் கோல் போடும் முயற்சிகளை தனி ஒருவராக தடுத்து போட்டி நாயகனானார்.

ஆட்டம் முழு நேரத்தைத் தொட்டபோது இரண்டு அணிகளும் தலா ஒரு கோலுடன் சம நிலையில் இருந்தன.

அதனைத் தொடர்ந்து வழங்கப்பட்ட 30 நிமிட மேலதிக நேரத்தின்போது கோல் போடுவதற்கான பல வாய்ப்புகளை ஸ்பெய்ன் தோற்றுவித்த போதிலும் ரஷ்ய அணித் தலைவரும் கோல் காப்பாளருமான இகோர் அகின்பீவும் வீரர்களும் அவற்றை ஒவ்வொரு முறையும் தடுத்த வண்ணம் இருந்தனர்.

மேலதிக நேர நிறைவின்போதும் ஆட்டம் வெற்றிதோல்வியின்றியே நிறைவடைந்திருந்தது.

இதனை அடுத்து வெற்றி அணியைத் தீர்மானிப்பதற்காக பெனால்டி முறையை மத்தியஸ்தர் அமுல்படுத்தினார். இதில் இரண்டு பெனால்டிகளை ரஷ்ய அணித் தலைவர் இகோர் அக்கின்பீவ் தடுத்து நிறுத்தி ரஷ்யாவை காலிறுதிக்கு இட்டுச் சென்றார்.

கோக் என அறியப்படும் ஜோர்ஜ் ரெசரெக்ஷனின் பெனால்டியையும் இகோர் அஸ்பாஸின் பெனால்டியையும் இகோர் அக்கின்பீவ் தடுத்து நிறுத்தி ரஷ்யாவுக்கு காலிறுதி வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தார்.

ஸ்பெய்ன் சார்பாக இனியெஸ்டா, பிக்கே, சேர்ஜியோ ரமோஸ் ஆகியோரும் ரஷ்யா சார்பாக ஸ்மோலொவ், சேர்ஜி இஞ்ஞாஷேவிச், கோலோவின், செரிஷேவ் ஆகியோரும் பெனால்டிகளை இலக்குத் தவறாமல் கோலினுள் புகுத்தினர்.


இப் போட்டியின்போது பல கோல் போடும் வாய்ப்புகளையும் சமநிலை முறிப்பு பெனால்டிகளில் இரண்டையும் தடுத்து நிறுத்திய இகோர் அக்கின்பீவ் ஆட்டநாயகனானார். (ஐ)

## கைலன் பாபியின் வள்ளல் தன்மை

ஆர்ஜென்ரீனாவுக்கு எதிராக இரட்டைக் கோல் போட்டு பிரான்ஸ் அணி வெற்றிக்கு உறுதுணையாக இருந்த கைலன்பாபிதன்சம்பளம்முழுவதையும் தொண்டுநிறுவனத்திற்கு வழங்குகிறார்.

21ஆவது உலகக் கிண்ண கால்பந்து போட்டிகள் ரஷ்யாவில் நடைபெற்று வருகின்றன.

சில தினங்களுக்கு முன்னர் நடந்த ஆர்ஜென்ரீனாவுக்கு எதிரான போட்டியில் பிரான்ஸ் 4-3 என்ற கோல்கணக்கில் வென்றது. இதில் கைலன் பாபி 64, 68 ஆவது நிமிடத்தில் அடுத்தடுத்து கோல் அடித்து அணியின் வெற்றிக்கு உதவினார்.இவர் உலகக் கிண்ணக் கால்பந்தில்



ஒவ்வொரு போட்டியிலும் விளையாட ரூபா 36 லட்சம் வாங்குகிறார். அப்படி தொடர் முழுவதும் விளையாடி பெறும் பணத்தை ஒரு தொண்டு நிறுவனத்திற்கு வழங்க முடிவு செய்துள்ளார்

வெறும்19வயதாகும்பாபியின்வள்ளல் தன்மை ரசிகர்களை நெகிழ்ச்சியடைய வைத்துள்ளது.



## ரொனால்டோவின் காலணி ஏற்படுத்தியுள்ள பரபரப்பு

உருகுவே அணியிடம் அடைந்த தோல்விக்குப்பின்ரொனால்டோவின் போர்த்துக்கல் அணி, ஹோட்டல் அறைக்குச்செல்லாமல், திடீரென்று அப்படியே மைதானத்தில் இருந்து விமான நிலையத்திற்குச் சென்று அங்கிருந்து போர்த்துக்கல் நாட்டுக்குச் சென்றுள்ளது.

உருகுவே அணிக்கு எதிரான போட்டியின்போது போர்த்துக்கல் அணியின் தலைவர் ரொனால்டோவின் காலணியைப் பற்றியும் பரபரப்பான வாதங்கள் சென்றன.

காரணம் ரொனால்டோ தன்னுடைய வலது காலணியில் தன்னுடைய இரண்டு மகள்களான அலானா மார்டினா டொஸ் சான் ரோஸ் அவேரோ மற்றும் ஈவா மாரியா டொஸ் சான்ரோஸ் ஆகியோரின்பெயர்களைப்பொறித்திருந்தார்.

இடதுகாலணியில்இரண்டுமகன்களான கிரிஸ்டியானோ ஜூனியர் மற்றும் மாட்டியோ ஆகியோரின் பெயர்களைப் பொறித்திருந்தார்.



## டென்மார்க்கை போட்டுத் தாக்கிய குரோஷிய அணி

உலகக்கிண்ண கால்பந்து தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இரண்டாவது ஆட்டத்தில் குரோஷியா அணி டென்மார்க்கை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறியது.

ஆட்டம் தொடங்கிய முதல் நிமிடத்தில் டென்மார்க் அணியின் மதியாஸ் ஜோர்ஜென்சன் ஒரு கோல் அடித்து தனது அணிக்கு வலு சேர்த்தார்.

இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில், ஆட்டத்தின் 4ஆவது நிமிடத்தில் குரோஷியா அணி வீரர் மரியோ மண்டுகிக் ஒரு கோல் அடித்தார். இதனால் ஆட்டம் 1-1 என்ற கோல் கணக்கில் சமனிலை அடைந்தது. இதனால் ஆட்டத்தின் முதல் பாதியில் குரோஷியா -டென்மார்க் அணிகள் 1-1 என சமனிலை வகித்தன.

ஆட்டத்தின் இரண்டாவது பாதியிலும் எந்த அணியும் கோல் அடிக்கவில்லை. இதனால் கூடுதல் நேரம் வழங்கப்பட்டது.

கூடுதலாக வழங்கப்பட்ட முதல் 15 நிமிடங்களில் இரு அணி வீரர்களும் கோல் எதுவும் அடிக்காததால் மறுபடியும் கூடுதல் நேரம் வழங்கப்பட்டது. இறுதியில், கிடைத்த பெனால்டி வாய்ப்பை குரோஷியா அணி பயன்படுத்தவில்லை. அப்போதும் எந்த அணியும் கோல் அடிக்கவில்லை.

இறுதியாக, பெனால்டி ஷூட் முறை நடத்தப்பட்டது. இதில் டென்மார்க் அடித்த முதல் வாய்ப்பை கோலை குரோஷியா கோல் காப்பாளர் தடுத்தார். அடுத்து குரோஷியா அடித்த கோலையும் டென்மார்க் கோல் காப்பாளர் தடுத்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

தொடர்ந்து, 2 ஆவது வாய்ப்பை டென்மார்க் கோலாக மாற்றியது. இதனால் 1-0 என முன்னிலை வகித்தது. குரோஷியா இரண்டாவது வாய்ப்பை கோலாக மாற்றியதால் 1-1 என சமநிலை அடைந்தது.

டென்மார்க் மூன்றாவது வாய்ப்பை கோலாக மாற்றியதால் 2-1 என முன்னிலை பெற்றது. குரோஷியாவும் அடுத்த வாய்ப்பை கோலாக மாற்றியது. இதனால் இரு அணிகளும் 2-2 என சமநிலை பெற்றன.

டென்மார்க் அணியின் 4ஆவது வாய்ப்பை குரோஷிய அணி கோல் காப்பாளர் அபாரமாகத் தடுத்தார்.



குரோஷியா அணியின் 4ஆவது வாய்ப்பையும் கோல் காப்பாளர் தடுத்ததால் சமநிலை நீடித்தது.

டென்மார்க் அணியின் கடைசி வாய்ப்பை குரோஷியா கோல் காப்பாளர் தடுத்து விட்டார். இதனால், குரோஷியா அணி தனது கடைசி வாய்ப்பை கோலாக மாற்றி 3-2 என்ற கோல் கணக்கில் டென்மார்க்கை வீழ்த்தி காலிறுதியில் நுழைந்தது.

காலைக்கதிர் Kalaikkathir



# மஹிந்த ஆட்சியை கவிழ்க்க பணம் வழங்கியதாம் அமெ.

## புதிய தகவலை அவரே வெளியிட்டார்



**கொழும்பு, ஜூலை 03**

**தனது தலைமையிலான அரசைக் கவிழ்க்க அமெரிக்கா நிதியுதவி வழங்கியது என்றும், பணம் கொடுத்தவர்களே இதனை ஒப்புக் கொண்டுள்ளார்கள் எனவும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுப் புதிய தகவலொன்றை அதிரடியாக வெளியிட்டார்.**

சிங்கள சினிமா கலைஞரான ரோய் டி சில்வாவின் இறுதிக் கிரியைகளில் நேற்றுப் பங்கேற்ற முன்னாள் ஜனாதிபதி, அதன் பின்னர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

2015 ஜனாதிபதித் தேர்தலின்போது அப்போதைய ஜனாதிபதி மஹிந்தவின் தேர்தல் பிரசாரத்துக்காக சீன நிறுவனம் ஒன்று 76 லட்சம் டொலர்களை வழங்கியது என 'நியூயோர்க் ரைம்ஸ்' பத்திரிகை வெளியிட்ட செய்தியால் எழுந்த பரபரப்பு அடங்குவதற்குள் மஹிந்த இந்தப் புதிய தகவலைக் கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

எமது அரசைக் கவிழ்க்க அமெரிக்கா நிதியுதவி செய்துள்ளது. எமது ஆட்சியைக் கவிழ்க்க அமெரிக்கா 600 மில்லியன் டொலர் செலவழித்தது எனப்பணம் வழங்கிய அமெரிக்க முன்னாள் இராஜாங்கச் செயலரான ஜோன் கெரியே கூறியுள்ளார்.

ஆனால், இது தொடர்பாக எவரும் கருத்துக்களைக் கூறவோ நடவடிக்கைகளை எடுப்பதாகவோ இல்லை. அது மட்டுமின்றி, தமது ஏனைய குற்றங்களை மறைக்கவே அமெரிக்க ஊடகத் தகவலை அனைவரும் பெரிதுபடுத்துகிறார்கள்.

நாம் இந்த விடயத்தை சட்டத்தரணிகளின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளோம். இவ்வாறு பொய்யான செய்திகளை வெளியிட்டு நாட்டின் நன்மதிப்பைச் சீர்குலைக்க சிலர் முயற்சித்து வருகிறார்கள்.

இதனால், நலன் விரும்பிகளின் வேண்டுகோளுக்கமைய, இந்த பத்திரிகைக்கு எதிராக நாம் சட்ட நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளோம்.

இந்த விடயத்தில் கட்சியும் தொடர்புபட்டுள்ளமையால், அவர்களும் இந்த விடயத்தில் பிரதானமாக நடவடிக்கை எடுப்பார்கள்.

இதுதொடர்பில் நான் அறிக்கையொன்றையும் வெளியிட்டுள்ளேன். எனக்குச் சீனா மட்டுமன்றி வேறு எந்த நாடுகளில் இருந்தும் பணம் வரவே இல்லை. இந்தச் செய்தியானது என்னையும் சீனாவையும் எதிர்க்கும் நோக்கிலேயே பரப்பப்பட்டுள்ளது. சொல்லப் போனால், அரசியல் பழிவாங்கல் என்றே கூறவேண்டும் – என்றார். (ஐ)

# மடுத் திருத்தலத்தின் ஆடித் திருவிழா; இலட்சக்கணக்கான மக்கள் பங்கேற்பு





மன்னார், ஜூலை 02

மன்னார் மடுத் திருத்தலத்தின் ஆடி மாதத் திருவிழா நேற்றுத் திங்கட்கிழமை கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. இதில் இலட்சக்கணக்கான மக்கள் பங்கேற்றனர்.

மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகைதலைமையில் கொழும்பு துணை ஆயர் மக்ஸ்வெல் சில்வா ஆண்டகை இணைந்து நேற்றுக் காலை 6.15 மணியளவில் திருவிழா திருப்பலியைக் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர்.

திருப்பலியைத் தொடர்ந்து மடு அன்னையில் திருச்சொரூபப் பவனியும் மடு அன்னையின் ஆசீர்வாதமும் இடம் பெற்றன.

இந்த விழாவில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், மன்னார் நீதிவான் ரீ.ஜே.பிரபாகரன், மன்னார் மறைமாவட்டக் குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை, மடு ஆலயப் பரிபாலகர் அருட்தந்தை எஸ்.எமிலியானுஸ்பிள்ளை மற்றும் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், திணைக்களத் தலைவர்கள் உட்பட நாட்டின் பல பாகங்களில் இருந்தும் வருகை தந்த இலட்சக்கணக்கான பக்தர்கள் பங்கேற்றிருந்தனர். (ஐ)

# போதைப்பொருளுக்கு எதிராக மல்லாவியில் வாகனப் பேரணி









முல்லைத்தீவு, ஜூலை 03

போதைப்பொருள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு வாகனப் பேரணி ஒன்று நேற்று முற்பகல் 11.30 மணியளிவில் மல்லாவிப் பகுதியில் இடம்பெற்றது.

துணுக்காய் பிரதேச செயலகம், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மற்றும் துணுக்காய் பிரதேச சபைப் பாடசாலை மாணவர்கள் இணைந்து இந்தப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

நேற்றுக் காலை மல்லாவி அணிஞ்சியன்குளம் பாடசாலை முன்பாக ஆரம்பித்த இந்தக் கவனவீர்ப்பு வாகனப் பேரணி துணுக்காய் பிரதேச செயலகத்தைச் சென்றடைந்தது.

மோட்டார் சைக்கிள்கள், ஓட்டோக்கள் பேரணியாக மல்லாவி மத்திய கல்லூரியை அடைந்தபோது அங்கு மாணவர்கள் பாடசாலை முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தினர்.

இதன் பின்னர் பேரணி துணுக்காய் பிரதேச செயலகம் சென்றபோது துணுக்காய் பாடசாலை மாணவர்களும் பிரதேச செயலகம் முன் கவனவீர்ப்பில் ஈடுபட்டு விழிப்புணர்வூட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

போதைப்பொருள் தடுப்பு தேசிய வாரம் கடந்த 26ஆம் திகதி முதல் நேற்று வரை நடைமுறைப்படுத்தப்பட்டது. இறுதி நாளான நேற்று மக்களை விழிப்புணர்வூட்டும் வகையில் இந்தக் கவனவீர்ப்பு வாகனப் பேரணி முன்னெடுக்கப்பட்டது. (ஐ–81)

# விடத்தல்தீவுப் பாடசாலையில் குளவிகளால் மாணவர் பாதிப்பு



விடத்தல்தீவு தூய ஜோசப்வாஸ் பாடசாலையில் தொடர்ச்சியாக மாணவர்கள் மீது குளவித் தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக் காலை குளவித் தாக்குதல் அச்சம் காரணமாகப் பாடசாலைக்குச் சென்ற மாணவர்களைப் பெற்றோர் தமது வீடுகளுக்கு அழைத்துச் சென்றனர்.

இந்தப் பாடசாலையில் கடந்த சில மாதங்களாகக் குளவிகளின் தாக்கம் மற்றும் பெருக்கம் அதிகரித்த நிலையில், தற்போது பாடசாலைக் கட்டடங்களில் சுமார் 26 குளவிக்கூடுகள் உள்ளன.

இதனால் பாடசாலை மாணவர்கள் தொடர்ச்சியாகக் குளவிகளின் தாக்குதல்களுக்கு இலக்காகியுள்ளனர். தற்போது வரை 8 மாணவர்கள் குளவிகளின் தாக்குதல்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இது தொடர்பாகப் பாடசாலை நிர்வாகம் மடு கல்விப்பணிப்பாளர் மற்றும் மன்னார் மாவட்ட அனார்த்த முகாமைத்துவப் பிரிவு ஆகியவற்றுக்கு முறைப்பாடு செய்தும் இதுவரை உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை எனக் கூறப்பட்டது.

இந்தப் பாடசாலையில் 284 மாணவர்கள் கல்வி கற்று வரும் நிலையில் மாணவர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் காணப்பட்ட குளவிக் கூடுகளை அகற்றுமாறு உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனப் பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர். (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.07.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.